# திருக்கோயில்

ஜூலை
1999

விலை
ரூபாய் ஐந்து









# திருக்கோயில்

திங்கள் இதழ்




| | | |
|---|---|---|
| தனி இதழ் | : | ரூ. 5.00 |
| ஆண்டு உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 60.00 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 500.00 |

| மாலை | திருவள்ளுவர் ஆண்டு 2030 | வெகுதானிய ஆண்டு ஆனி | மணி |
|---|---|---|---|
| 41 | ஜூலை 1999 | | 7 |


## சிறப்பாசிரியர்

**சுகவனேஸ்வர், இ.ஆ.ப.**

சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர்

## ஆசிரியர்

**முனைவர் த. அமிர்தலிங்கம்,**
எம்.ஏ., பி.எச்.டி.

## திருக்கோயில் நிர்வாகக் குழுவினர்

**திரு எஸ். கனகய்யா,** பி.எஸ்.சி., பிஎல்.
கூடுதல் ஆணையாளர்

**திரு ப. தனபால்,** எம்.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர், தலைமை இடம்

**திருமதி மா. கவிதா,** பி.எல்.
ஆணையாளரின் நேர்முக உதவியாளர்
(பொறுப்பு)

**திரு தி. ஜெயராமன்,** பி.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர் - செயல் அலுவலர்
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில், பழநி.

## முகப்பு

**திருமணஞ்சேரி அருள்மிகு கல்யாண சுந்தரேசுவரர், கோகிலாம்பாள் திருமணக்கோலம்**

## பொருளடக்கம்


*திருவேற்காடு அருள்மிகு வேதபுரீசுவரர் மற்றும் தேவி கருமாரியம்மன் திருக்கோயில் திருக்குட நீராட்டு விழா வைபவம்*
- சுகவனேஸ்வர் இ.ஆ.ப. சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர் அவர்கள்

*அருள்மிகு துர்க்கையம்மன் போற்றி*

*பெரிய புராணத்தில் வரலாற்றுச் சிறப்பு*
- கலைமாமணி கவிஞர் கே.பி. அறிவானந்தம்

*சிவானந்த லகரியில் மனம்*
- டாக்டர் டி. செல்வராஜ்

*கம்பரின் இராமாவதாரம்*
- கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன்

*ஷேயத்தே நிற்றல்*
- டி.என்.எஸ். முருகதாஸ் தீர்த்தபதி

*ஆடி அமாவாசை நோன்பு*
- திருமதி மீனாட்சி கோகிலவாசன்

*ஸ்ரீ அழகிய மணவாள மாமுனிகள்*
- திருமதி கோமதி ராகவன்

*வினாவும் விடையும்*
- திருப்புகழ் மாமணி மு. அருணகிரி

*வினாவும் விடையும் - சாத்தம்*
- டாக்டர் பருத்தியூர் சந்தானராமன்



உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி :

**உயர்திரு ஆணையாளர் அவர்கள்**

**திருக்கோயில்**

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை

119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.

தொலைபேசி : 8279407

# திருவேற்காடு அருள்மிகு வேதபுரீசுவரர் மற்றும் தேவி கருமாரியம்மன் திருக்கோயில் திருக்குட நீராட்டு விழா வைபவம்

- சுக்வனேஸ்வர், இ.ஆ.ப.,
சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர் அவர்கள்

தொண்டை நன்னாட்டின் பெருமையைத் தெய்வச் சேக்கிழார் பெருமான்

''தீய என்பன கனவிலும் நினைவிலாச் சிந்தை
தூய மாந்தர் வாழ் தொண்டை நாட்டு இயல்பு
சொல்வரைத்தோ?''

என்று சாற்றியிருப்பது கொண்டு, நாம் தெளிந்து மகிழலாம்.

இத்தகைய தொண்டை நன்னாட்டின் கண் பாடல் பெற்ற 32 சிவாலயங்கள் மிகச் சிறந்து விளங்கு கின்றன. அவற்றுள் பராசக்தியான உமை அன்னை யிடம் ஞானப்பால் உண்ட ஆளுடைய பிள்ளையாராம் திருஞானசம்பந்தர் தம் தேவாரப் பாடல்பெற்ற பழமை யும் பெருமையும் மிகுந்த திருத்தலம்தான் திருவேற் காடு.

''மன்னிப் பெருகும் பெருந்தொண்டை
வளநாடு அதனில் வயல்பரப்பும்
நல்நித்தில வெண்திரைப் பாலி
நதியின் வடபால் நலங்கொள் பதி
அன்னப் பெடைகள் குடை வாவி
அலர்புக்கு ஆட அரங்கின் இடை
மின்னுக் கொடிகள் துகில் கொடிகள்
விழவின் காடு வேற்காடு''

என்று பாலிநதியின் வடக்கில் அமைந்து விளங்கும் வளமை சான்ற திருவேற்காட்டின் இயற்கை நலத்தை வியந்து போற்றியுள்ளார் நம் சேக்கிழார் பெருமான்.

அவரே திருவேற்காட்டில் உயர்ந்த மதில் களோடு சிறப்புறக் கட்டப்பட்டிருந்த திருவேற்காடு அருள்மிகு வேதபுரீசுவரர் ஆலயச் சிறப்பினையும்

''செம்பொன் புரிசை திருவேற்காடு
அமர்ந்த செய்ய சடைக்கற்றை நம்பர்''

எனப் பாடியிருப்பதைக் காணுகின்றோம்.

திருஞானசம்பந்தர் கி.பி. 7ஆம் நூற்றாண்டி லேயே திருவேற்காடு திருத்தலம் வந்து அருள்மிகு வேதபுரீசுவரரைக் காதலால் கைகூப்பி வணங்கிச் செந்தமிழ்ப் பதிகம் பாடி இன்புற்று மகிழ்வில் திளைத் திருந்தமையைத் தேவாரமும் பெரிய புராணமும் நமக்கு நன்கு எடுத்துக் காட்டுகின்றன.

''ஆடல் நாகம் அசைந்தள வில்லதோர்
வேடம் கொண்டவன் வேற்காடு''

''பூதம் பாடப் புறங்காட் டிடையாடு
வேத வித்தகன் வேற்காடு''

''ஆழ்கடல் எனக் கங்கை கரந்தவன்
வீழ்சடையினன் வேற்காடு''

''தோலி னால் உடை மேவவல் லான்சுடர்
வேலி னால் உறை வேற்காடு''

''மூரல் வெண்மதி சூடும் முடியுடை
வீரன் மேவிய வேற்காடு''

என ஒவ்வொரு பாடலிலும் திருவேற்காட்டில் அமர்ந்தருளும் வேதபுரீசுவரரைப் போற்றியுள்ள திருஞானசம்பந்தர், திருவேற்காடு சென்று தொழும் மெய்யடியார்கள் நலங்கள் யாவும் கொண்டு குண முற வாழ்வர் என்பதனையும் திருக்கடைக்காப்பில் அமைத்து

''விண்ட மார்பொழில் சூழ்திரு வேற்காடு
கண்டு நம்பன் கழல் பேணிச்
சண்பை ஞானசம் பந்தன் செந்தமிழ்
கொண்டு பாடக் குணமாகும்''

எனப் பாடியிருக்கும் சிறப்பை நாம் உய்த்து உணர லாம்.

திருஞானசம்பந்தர் திருவேற்காடு வந்து அருள் மிகு வேதபுரீசுவரரை வணங்கி மகிழ்ந்த தன்மையைச் சேக்கிழார் பெருமானும் பெரியபுராணத்தில் விவரித் துப் பாடியுள்ளார்:

''மன்னு புகழ்த் திருத்தொண்டர் குழாத்தினோடும்
மறைவாழ வந்தவர் தாம் மலையும் கானும்
முன் அணைந்த பதிபிறவும் கடந்து போந்து
முதல்வனார் உறைபதிகள் பலவும் போற்றிப்
பன்மணிகள் பொன்வரன்றி அகிலும் சந்தும்
பொருது அலைக்கும் பாலி வடகரையில் நீடு
சென்னிமதி அணிந்தவர் தம் திருவேற்காடு
சென்று அணைந்தார் திருஞானம்
உண்ட செல்வர்''

''திருவேற்காடு அமர்ந்த செழுஞ் சுடர்
பொன் கோயில்
சென்று அணைந்து பணிந்து திருப்பதிகம் பாடி''

எனப் பெரிய புராணத்தில் திருஞானம் உண்ட செல்வ ராகிய திருஞானசம்பந்தர் திருவேற்காடு வந்து வழி

பட்டதைப் போற்றிப் பரவியிருப்பதை நாம் காணு கின்றோம்.

முருகப்பெருமான் சூரர்களை வெல்வதற்காக பராசக்தியிடம் வேல் பெற்ற இடம் இதுவாதலால் இத்தலத்திற்கு வேற்காடு என்பது பெயராயிற்று என்பர். திருஞானசம்பந்தரும் தாம் பாடியுள்ள தேவாரப் பாடலில்

''தோலினால் உடை மேவ வல்லான் சுடர்
வேலினால் உறை வேற்காடு''

எனப் பாடியிருத்தல் உணர்ந்து மகிழத்தக்கது.

நான்கு வேதங்களும் வேலமரங்களாய் நின்று வழிபட்டதால் இத்தலம் வேற்காடு எனவும், இறைவன் திருப்பெயர் வேதபுரீசுவரர் எனவும் அமைந்தது என்பர். அதற்கொப்ப திருஞானசம்பந்தப் பெருமானும்

''வேத வித்தகன் வேற்காடு''

எனப் பாடிப் பரவியிருப்பது குறிப்பிடத்தக்கது.

அகத்தியமுனிவருக்கு இறைவன் தம் திருமணக் கோலக்காட்சி அருளிய தலமும் இதுவாதலால், அழகிய சிவலிங்கத் திருமேனி மூலவராக விளங்க, அதற்குப் பின்னால் சுவரில் திருமணக் கோலத்தில் சுவாமியும், அம்பாளும், அருகில் விநாயகருடன் காட்சி வழங்குவதைக் கண்டு இன்புறலாம். கல்யாண சுந்தரமூர்த்தி விசேடமாகத் தோற்றமளிக்கும் தலங்களில் இது ஒன்றாகும்.

மேருமலையில் மயன் நிர்மாணித்த செம்பொன் திருமண மண்டபத்தில் சிவபெருமான் - பார்வதி திருமணக் கோலத்தைத் தரிசிக்க, எல்லாப் புவனங்களிலும் உள்ளவர்கள் வந்து கூடியபோது பூமியின் வடகோடு தாழ்ந்து தென்கோடு உயர்ந்தது. அப்பொழுது பூமியைச் சமன்செய்யப் பொதிய மலைக்குச் செல்லுமாறு அகத்திய முனிவருக்கு ஆணை பிறப்பித்தருளினார் சிவபெருமான்.

''கருணையே வடிவான எம்பெருமானே! தங்கள் திருமணக் காட்சியை யான் காண இயலாதே!'' என்று அகத்திய முனிவர் குறையிரக்க ''நாம் நமது திருமணக் கோலத்தை உமக்குக் காட்டுவோம். தென்திசை செல்க'' என்று திருவாக்கருளிய சிவபெருமான் அகத்திய முனிவருக்குத் தமிழ்த் திருநாட்டின் கண் பற்பல திருத்தலங்களில் திருமணக் கோலத்தைக் காட்டியருளினார். அவ்வாறு அகத்தியருக்குத் திருமணக் கோலம் காட்டியருளிய முதன்மையான திருத்தலம்தான் திருவேற்காடு அருள்மிகு வேதபுரீசுவரர் திருத்தலம் ஆகும்.

சதாசிவமூர்த்தங்கள் அறுபத்தி நான்கினுள், 25 திருவுருவங்களைச் சிறப்பித்து மகேசுவர மூர்த்தங்கள் எனச் சிறப்பிக்கின்றனர். அவற்றுள் சில நிக்கிரக மூர்த்தங்கள்; சில அனுக்கிரக மூர்த்தங்கள். சிவபெருமான் பார்வதி திருமணக் கோலமே கலியாண



சுந்தரர் எனும் அனுக்கிரக மூர்த்தமாகப் போற்றப்படுகின்றது. அத்தகைய அனுக்கிரக மூர்த்தமே திருவேற்காடு அருள்மிகு வேதபுரீசுவரர் திருக்கோயிலில் நாம் காணும் சிவபெருமான் - பார்வதி திருமணக் கோலம் ஆகும்.

திருவேற்காட்டில் அருள்மிகு வேதபுரீசுவரர் ஆலயம் வந்து வழிபடும் மெய்யடியார்களுக்கு ''கல்யாண சௌபாக்யம்'' கைமேல் பலனாகக் கைகூடி வருவது குறிப்பிடத்தக்க சிறப்பம்சம் ஆகும்.

அபிராமி அந்தாதியில் ஒவ்வொரு பாடலும் ஒவ்வொரு பலனை மெய்யடியார்களுக்கு நல்குவதாகக் கூறுவர்.

''குயிலாய் இருக்கும் கடம்பாடவியிடை, கோலவியன்
மயிலாய் இருக்கும் இமயாசலத்திடை, வந்துதித்த
வெயிலாய் இருக்கும் விசும்பில், கமலத்தின் மீது அன்னமாம்
கயிலாயருக்கு அன்று இமவான் அளித்த கனங்குழையே''

என்ற 99ஆவது பாடலைப், பாராயணம் செய்வாருக்கு திருமணம் கைகூடி வரும் என்பர் சான்றோர். அன்னை பாலாம்பிகையுடன் அருள்மிகு வேதபுரீசுவரர் திருமணக் கோலத்தில் அகத்தியருக்குக் காட்சியளித்த அற்புதத் தலமாம் திருவேற்காட்டில் அபிராமி அந்தாதியின் மேற்காணும் பாடலைப் பாடி வழிபட, திருமணம் கைகூடுதல் திண்ணமாகும்.

திருமண வரம் நல்கும் இத்தகு மகிமைமிகு திருவேற்காடு திருத்தலம், அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான மூர்க்கநாயனார் அவதரித்த பெருமையும் கொண்டு விளங்கும் திருத்தலம் ஆகும்.

''வேற்காட்டு ஊர்
உள்நிலாவும் புகழ்த்தொண்டர் மூர்க்கர்''

என்று மூர்க்க நாயனாரைக் குறிப்பிடும் சேக்கிழார் பெருமான் வேளாளர் குலத்தில் தோன்றிய மூர்க்க நாயனார், இத்திருவேற்காடு திருத்தலத்தில் நித்தமும் மகேசுவரபூஜை செய்து, அடியார்களை அமுது செய்வித்த சிறப்பினைப் போற்றுகின்றார்.

''கோதுஇல் மரபின் பிறந்து வளர்ந்து
அறிவுகொண்ட நாள் தொடங்கி
ஆதிமுதல்வர் திருநீற்றின்
அடைவே பொருள் என்று அறிந்து, அரனார்
காதல் அடியார்க்கு அமுது ஆக்கி
அமுது செய்யக் கண்டு உண்ணும்
நீதி முறைமை வழுவாத
நியதி பூண்ட நிலைமையார்''

''தூய அடிசில் நெய்கன்னல்
சுவைஇன் கறிகள் அவைஅமைத்து
மேய அடியார் தமைப் போற்றி
விருப்பால் அமுதுசெய்வித்தே
ஆய பொருளும் அவர் வேண்டும்
படியால் உதவி அன்புமிக
ஏயுமாறு நாள்தோறும்
இனைய பணி செய்து இன்புற்றார்''

இத்தகைய மகேசுவரப் பூஜையால் இறையடி நீழல் பெற்று இன்புற்றுத் திளைக்கும் மூர்க்க நாயனாருக்குத் தனிச் சன்னிதி அருள்மிகு வேதபுரீசுவரர் ஆலயத்தில் இருப்பது நாம் வழிபட்டுப் பயன்கொள்ளத்தக்கது ஆகும்.

முருகப் பெருமான்தம் வேலால் உண்டாக்கிய தீர்த்தம், வேலாயுதத்தீர்த்தம் என வழங்கப்பட்டு வருகின்றது. இத்திருக்கோயிலில் எழுந்தருளிய முருகப் பெருமானை அருணகிரிநாதர் திருப்புகழ் பாடிப் போற்றியுள்ளார்.

''வேற்காடுறை வேதபுரீசுரர் தருசேயே!.....
பெருவாழ்வெனவே வரு பெருமாளே''

என்பது அருணகிரிநாதர் திருப்புகழாகும்.

இத்தகைய சிறப்புகள் அனைத்தும் நிறைந்த திருவேற்காடு திருத்தலத்தில் ஆதிநாளிலேயே தோன்றி இந்நூற்றாண்டில் மகிமை பெற்று மிகக் குறுகிய காலத்தில் சிறப்புற்ற வளர்ந்த அன்னையின் திருத்தலமே அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருத்தலம் ஆகும்.

தேவி கருமாரி அன்னையின் பெருமையை எடுத்துமொழிதல் எளியசெயல் அன்று என்பதைத் தேவி கருமாரியம்மன் புராணம் கீழ்க்காணும் பாடலால் எடுத்துக் கூறுகின்றது.

''கண்டாலும் பிணிநீங்கும் நிதிபெருகும் கலைஓங்கும்
ஞானமுறும் கருத்துணர்ந்து
விண்டாலும் வாணாட்கள் மிகுப்பெருகும்
செவியுற்றால்
வீரமுறும் வேதை தீரும்
பண்டாலின் கீழமரும் பரமனருள் சிறப்புற்றுப்
பரஞானப் பதமளிக்கும்
மண்டலத்தில் தேவி கருமாரியளின் புராணச்சீர்
எவராலும் மொழியொணாதே''

சக்திவழிபாடு நம் பாரத நாட்டில், மிகப் பழங்காலத்திலிருந்தே சிறப்புற்று விளங்கி வருகின்றது. ஆராய்ச்சியாளர்கள் சிந்து வெளிநாகரிகக் காலம் கி.மு. 4000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று கணக்கிட்டுக் கூறுகிறார்கள். ஹரப்பா, மொகஞ்சோதாரா ஆகிய இடங்களில் நிகழ்த்தப்பெற்ற அகழ்வாராய்ச்சிகளில் அம்பிகையின் மண்ணால் ஆன திருவுருவங்கள் பலவும் கிடைத்திருப்பதைக் கொண்டு சக்தி வழிபாட்டின் தொன்மையை நமக்கு ஆராய்ச்சியாளர்கள் தெளிவுபடுத்துகிறார்கள்.

''அருளது சக்தி யாகும் அரன் தனக்கு''

என்ற சிவஞான் சித்தியாரில் வரும் தொடரால் இறைவனது அருள்கின்ற தன்மையே சக்திவழிபாடாக மலர்ந்தது என்பதை நாம் அறிந்துகொள்ளலாம்.

தாய் தன் குழந்தைகள் செய்யும் தவறுகளை மன்னித்து, அன்பு செலுத்திப் பரிவுகாட்டி நலம் செய்கின்றாள். அவ்வாறே இறையருள் சக்தியாகிய தேவியும், உலகுயிர்கள் செய்யும் பிழைகள் யாவும் பொறுத்து திருவருள் புரிகின்றாள்.

கார்மழை போல் உலகிற்கு அருள் செய் செய்யும் சக்தியே கருமாரி ஆவாள்.

''ஏனார் சோலை கருமாரி'' என்று அப்பரடிகள் தாம் பாடியுள்ள திருத்தாண்டகத்தில் பாடியிருப்பது கொண்டு, கருமாரியன்னையின் பழமையை நாம் அறியலாம்.

திருவேற்காட்டில் அருள்மிகு வேதபுரீசுவரருடன் வீற்றிருந்து அருள்பாலித்தவள் வேற்கண்ணி அம்மை. சூரர்களை மாய்ப்பதற்கு முருகப் பெருமானுக்கு வேல் கொடுத்த சக்தி இவளே ஆதலால் இவளுக்கு வேற்கண்ணி என்ற நாமம் உண்டானது.

வேற்கண்ணி முருகப் பெருமானுக்கு வேல் அளித்த சிறப்பினை

''கண்ணுதலோன் கண்நோக்க வேற்கண்ணி
களிப்புற்றுக்
குதுகலித்து அன்பு கூர்ந்து
மண்ணவரும் விண்ணவரும் வாழ்வுறவும்
அவுணர் குலம்
அறக்களைவாய் என்றுரைத்து
எண்ணற்ற எழுபரிதிச் செழுஞ்சுடரின் ஒளிவிஞ்சச்
சுடர்வேலைக் கரத்தெடுத்து
கண்மணியாம் சேயவனின் கரமீந்து
அருள் புரிந்தாள்
கண்ணுதலோன் உவகையுற்றான்''

என்று தேவி கருமாரியம்மன் புராணம் கூறுகின்றது.

இவ்வாறு சூரபதுமனாதி அரக்கர்களின் அல்லல் ஒழிய சக்திவேல் தந்து அருள்புரிந்த வேற்கண்ணி அம்மையிடம் சிவபெருமான் சாம்பலை எடுத்துத் தந்து ''இத்திருநீற்றினால் ஐந்தொழிலைப் பூவுலகில் கருமாரியாய் வீற்றிருந்து அருள்புரிக'' என்று அரி



**காஞ்சிபுரம் அருள்மிகு தேவராஜசுவாமி திருக்கோயிலில் தவத்திரு ஜெயேந்திர சரசுவதி சுவாமிகள் வைணவ ஆகமங்கள் பயிற்று மையத்தைத் துவக்கிவைத்து அருளாசி வழங்கினார்கள். மாவட்ட ஆட்சியாளர் திருமிகு சுகுமார், இ.ஆ.ப., வேலூர் இணை ஆணையாளர் திருமிகு ப. ராஜா, பி.எஸ்.சி., பி.எல்., உதவி ஆணையாளர் திரு பி. வாசுநாதன், எம்.ஏ., பிஎல்., ஆகியோர் இவ்விழா வில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.**

★★★

வுறுத்தவே பண்டுதொட்டு கருமாரியாய் இத்தலத்தில் தேவி பராசக்தி வீற்றிருந்து அருள்புரிந்து வருகின்றார்.

க என்பது பிரமனையும்

ரு என்பது ருத்திரனையும்

மா என்பது திருமாலையும் குறிப்பனவாகும். பிரமன், ருத்திரன், திருமால் ஆகிய மும்மூர்த்திகளும் போற்றும் பராசக்தி, தேவி கருமாரி ஆவாள்.

சிவபெருமான் தமக்கு அளித்த திருச் சாம்பலையே தம் அடியவர்க்கும் வழங்கி அருளாட்சி புரிந்து வருகின்றாள் அன்னை கருமாரி.

''கருமாரி திருநாமம் கருத்திருத்தித்
திருநீற்றை நுதற் தரித்தால் கன்மம் தீரும்
கருமாரி என்றுரைத்துக் குளிர்நீரில்
திருநீற்றை உட்கொண்டால் வினைகள் நீங்கும்
கருமாரி தேவியளைக் கண்ணுற்றுக்
கழல் வணங்கச் செயல்களெல்லாம்
வெற்றி சேரும்
கருமாரி திருநீற்றால் காசினியில் எண்சித்தும்
செயலாற்றிக் களிக்கலாமே''

என்று தேவி கருமாரியன்னையின் திருச்சாம்பல் பிரசாத மகிமையைப் போற்றுகின்றது தலபுராணம்.

தேவி கருமாரி அளித்த சாம்பலால் முருகன் அமைத்த திருக்குளம் சாம்பர் பொய்கை எனச் சிறப்பிக்கப் பெற்று வருகின்றது. பஞ்சமாபாதகங்களும் சாம்பல் பொய்கையில் நீராட பறந்தோடும் என்றும் தலபுராணம் கூறுகின்றது.

சூரியன் தனக்குரிய ஞாயிற்றுக் கிழமையை அன்னையின் திருநாளாகக் கொண்டு அடியவர்களுக்கு அருள்பாலிக்க வேண்டும் என்று வேண்டி கொண்டான். அதனை ஏற்று, அன்னைதிருவருள் புரிந்தமையால் திருவேற்காடு தேவிகருமாரியம்மன் ஆலயத்தில் ஞாயிற்றுக்கிழமை வழிபாடு சிறப்பினைப் பெற்று விளங்குகின்றது.

அகத்திய முனிவர் ஆடிமாதம் ஞாயிற்றுக் கிழமையில் அன்னை கருமாரியைப் போற்றி வழிபட்டமையால் ''ஆடியில் ஞாயிற்றுக்கிழமைகளில் என்னைத் துதிப்பவர்கட்கு அனைத்து வரங்கள் தருவேன்'' என்று அன்னை வரம் அளித்தபடியே ஆடி மாத ஞாயிற்றுக்கிழமை வழிபாடு இத்திருத்தலத்தில் சிறப்பினைப் பெற்று விளங்குகின்றது.

பஞ்ச பூதங்களும் அன்னையை வழிபட்டு வேண்டிக் கெகண்டதற்கு இணங்க அப்பஞ்ச பூதங்களையும் ஐந்து நாகங்களாகத் தன் முடிமேல் கொண்டு திருவருள் பாலித்தாள் தேவி கருமாரி அன்னை.

உலக மக்கள் உய்யும்பொருட்டு கிருத, திரேத, துவாபர யுகங்களில் பாம்புருவம் கொண்டு புற்றில் அமர்ந்து அருள் புரிந்தாள் தேவி கருமாரி. அன்னை பாம்புருவாகித் திருவருள் பாலித்தமையால், அவள் குடிகொண்ட இத்திருத்தலம் ''விஷம் தீண்டாப் பதி'' எனவும் சிறப்பிக்கப்பட்டு வருகின்றது. சண்டி துர்க்கையின் காமதேனு மூர்த்தியென மாரியம்மனை சண்டி சப்தஸதீ என்னும் நூல் கூறுகிறது.

இக்கலியுகத்தில், மேலே நாற்கரத்தளாய் அமர்ந்த சிவசக்திக் கோலத்துடனும், கீழே உடல் மறைத்துத் தலைகாட்டும் நாரணிக் கோலத்துடனும் ஈருருவாய் அமைந்து அருள் பாலித்து வருகின்றாள் அன்னை தேவி கருமாரி.

பராசக்தியின் எழு உருவாக அந்தரக்கண்ணி, ஆகாயக் கண்ணி, பிராமணக் கண்ணி, காமாட்சி, மீனாட்சி, விசாலாட்சி, கருமாரி ஆகியோரைக் கூறுவர். முதல் மூவரும் காடு, மலை, வனம், ஆறு, ஏரி, குளம் இவற்றின் அருகருகே ஆங்காங்கே எழுந் தருளினார்கள்.

காமாட்சி காஞ்சியிலும், மீனாட்சி மதுரையி லும், விசாலாட்சி காசியிலும் எழுந்தருள, ஏழாவதாய் நின்ற கருமாரி சிவை, நாராயணி என ஈருருக் கொண்டு திருவேற்காட்டில் திருக்கோயில் கொண்டனள்.

அன்னை தேவி கருமாரி ஈருரு கொண்ட போது கருநீல பெரிய உருவாகி நின்றபோது திருமால் ''உலகத்தார் உய்ய நின் கடைக்கண் நோக்கு ஒன்று போதுமே'' என்று கூற, அன்னையும் தன் நிலை மறைத்து அருள் புரிந்ததாகக் கூறுவர்.

திருச்சியில் இறைவர் எவ்வாறு மாத்ரு பூதேசு வரராக - தாயுமானவராக நின்றாரோ அதுபோல் அம்மை சிவக்கோலம் பூண்டு பிறைச்சந்திரன் உடைய வளாய், மூவிலை, சூலம், உடுக்கை, வாள், பொற் கிண்ணம் ஏந்தி சிவக்கோலம் பூண்டு காட்சி தருவது இத்திருவேற்காட்டுத் திருத்தலத்தில்தான் என்று அறுதியிட்டுக் கூறலாம்.

இவ்வாறு சிவை, நாராயணி எனும் ஈருருவாக அமைந்து இக்கலியுகத்தில் அருள்புரியும் கண்கண்ட தெய்வமாம் திருவேற்காடு அருள்மிகு தேவிகருமாரி யம்மன் திருக்கோயில் திருக்குட நீராட்டு விழா 24.6.99 அன்று நடை பெறுவது, மெய்யன்பர்கள் அனைவரும் உய்யக் கிடைத்த வரப்பிரசாதம் என்பதில் யாதொரு ஐயமும் இல்லை.

''என்னை நம்பி வரக்கூடிய பக்தர்களுக்குச் சாம்பல் கொடுத்து, அவர்கள் வினை தீர்த்து, அவர்கள் கொடுக்கும் அன்புக் காணிக்கையைக் கொண்டு, திருப்பணிகள் செய்து கொள்வேன்'' என்பதாக அன்னை திருவாக்கருளி, அவள் திருப்பணியை அவளே சிறப்புற நடத்திக் கொண்டு வருவது இக் கலியுகத்தில் நாம் கண்டு வரும் அற்புதமாகும்.

1941ஆம் ஆண்டுவாக்கில் ஓலை வேய்ந்த கூரையின் கீழ் ஓர் புற்றுருவே கோயிலாக அமைந்து அருளாட்சி புரிந்த அன்னை, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து இன்று கோடானகோடி மெய்யன்பர்கள் அனுதினமும் வந்து வணங்கும் வகையில் பெருவளர்ச்சி பெற்று, பேருல காட்சி புரிந்து வருகின்றாள்.

அன்னை வேற்கண்ணி உடனுறை அருள்மிகு வேதபுரீசுவரர் திருக்கோயிலுக்கும், அருள்மிகு தேவி கருமாரி அம்மன் திருக்கோயிலுக்கும் முறையே 23.6.99 மற்றும் 24.6.99 நாட்களில் திருக்குட நீராட்டு விழாக்கள் நடைபெறுவது நாடு பெற்ற பேறு; நாம் பெற்ற பெரும்பேறு.

முதன்முதலாக தேவிகருமாரியம்மன் திருக் கோயிலுக்கு 1942 ஆம் ஆண்டு தைப்பூச நன்னாளில் கருமாரியம்மனின் சிலா விக்கிரகத்தை அன்னை புற்றுருவாய் இருந்த இடத்தில் பிரதிஸ்டை செய்து, தேவி கருமாரி அம்மன் தேவஸ்தானத்தை உருவாக்கி யுள்ளனர். பின் 1956இல் திருக்கோயிலின் பின்புற முள்ள ''திரிதள கோபுரம்'' திருக்குட நீராட்டு விழா செய்யப்பட்டுள்ளது.

பிறகு 19.6.1964இல் திருக்குடநீராட்டு விழா நடைபெற்றுள்ளது. 1975இல் திருப்பணிகள் நிறை வேற்றித் திருக்குட நீராட்டு விழா; அதன் பிறகு 1982இல் மூன்றாம் பிரகாரத்தில் 14 திருக்கோயில் களைத் தனித்தனியாக அமைத்துத் திருக்குட நீராட்டு விழா நிகழ்த்தியுள்ளனர்.

பிறகு 12.7.87, 13.7.87 ஆகிய இருநாட்களில் முறையே அருள்மிகு வேதபுரீசுவரர் அருள்மிகு சீனிவாசப் பெருமாள், அருள்மிகு தேவி கருமாரி யம்மன் திருக்கோயில் திருக்குட நீராட்டு விழா நிகழ்த்தியுள்ளார்கள்.

12 ஆண்டுகளுக்கு ஒரு முறை திருப்பணிகள் நிறைவேற்றித் திருக்குட நீராட்டு விழா நிகழ்த்தப்பட வேண்டும் என்ற-ஆகம வழக்கம் சிறிதும் மாறுபடா மல் இப்பொழுதும் சுமார் 54 லட்சம் செலவில் திருப்பணிகளை நிறைவேற்றி 23.6.99 அன்று அருள் மிகு வேதபுரீசுவரர் மற்றும் அருள்மிகு சீனிவாசப் பெருமாள் திருக்கோயில்களுக்கும் 24.6.99 அன்று கலியுகத்தின் கண்கண்ட தெய்வம் அருள்மிகு தேவி கருமாரியம்மன் ஆலயத்திற்கும் நாடு போற்ற திருக் குட நீராட்டு விழாக்கள் நடைபெறச் செய்வது மகத்தான தேவி கருமாரியின் திருவருள் ஆகும். இம்மகத்தான வைபவத்தில் மெய்யடியார்கள் எல் லோரும் கலந்து கொண்டு தேவி கருமாரியின் திரு வருள்பெற அன்புடன் வேண்டுகின்றேன்.

''அருள்திரு நீற்றினாலே
ஐந்தொழில் புரியும் அன்னை
அருள்திரு ஞானசக்தி
ஆதியாங் கருமாரித் தாய்
அருள்திரு வேற்காடுற்று
ஆட்சி புரியும் சீலி
அருள்திரு நீறளிக்கும்
அன்னையைப் பணிவோர் வாழி''

★★★

# அருள்மிகு துர்க்கையம்மன் போற்றி

### தமிழ் அர்ச்சனை - அருள் வேண்டுதல்
### (சங்கற்பம்)

நாளும் கோளும் நன்னிலை பொருந்திய இந்நன்னாளில் ...... அவர்களுக்கும் அவர்கள் குடும்பத்தார்க்கும், சுற்றத்தார்க்கும், சமூகத்தார்க்கும், உலகுயிர்கட்கும், அறம், பொருள், இன்பம், வீடு எனும் நாற்பயனும் பொருந்தி நன்னிலை எய்தவும், நீண்ட வாழ்நாள் பெருகவும், திருவருள் பெருகவும், மங்கல வாழ்வெய்தவும் உம் திருவடிகளில் மலர் தூவி வழிபாடு செய்கின்றோம்.

### அருள்மிகு துர்க்கையம்மன் 8 போற்றிகள்

1. ஓம் அச்சம் அகற்றும் அன்னை போற்றி
2. ஓம் சிங்க வாகனச் சிறப்பே போற்றி
3. ஓம் சுகம்தரச் சுடரும் விழியே போற்றி
4. ஓம் தேவரும் வணங்கும் தேவி போற்றி
5. ஓம் முக்கண் சுடரும் முதல்வி போற்றி
6. ஓம் முற்றுச் சொல்லாய் முடிப்பாய் போற்றி
7. ஓம் யோகத்தமிழாய் உதிப்பாய் போற்றி
8. ஓம் வெற்றிவேல் தடக்கையாய் போற்றி போற்றி.

### அருள்மிகு துர்க்கையம்மன் 16 போற்றிகள்

1. ஓம் அச்சம் அகற்றும் அன்னை போற்றி
2. ஓம் எல்லாச் சித்தியும் இயற்றுவாய் போற்றி
3. ஓம் குருநாடிக்குரிய கொடியே போற்றி
4. ஓம் கொடியோர் கொடுமை குலைப்பாய் போற்றி
5. ஓம் சுமங்கலியாகும் வடிவே போற்றி
6. ஓம் நஞ்சை முறிக்கும் நலமே போற்றி
7. ஓம் பளிங்கில் நூல்போல் பொலிவாய் போற்றி
8. ஓம் பிரிவற நிற்கும் பிடியே போற்றி
9. ஓம் பூசல் புணர்க்கும் புகழே போற்றி
10. ஓம் பெரியதற்கெல்லாம் பெரியாய் போற்றி
11. ஓம் மலையினும் திண்ணிய மலரே போற்றி
12. ஓம் மனத்தின் உன்னத மணியே போற்றி
13. ஓம் முச்சொல் முடிவில் முனைவாய் போற்றி
14. ஓம் வாக்குத் தமிழாய் வருவாய் போற்றி
15. ஓம் விருப்பம் முடிக்கும் விசையே போற்றி
16. ஓம் வெற்றிவேல் தடக்கையாய் போற்றி போற்றி

### அருள்மிகு துர்க்கையம்மன் 108 போற்றிகள்

1. ஓம் அச்சம் அகற்றும் அன்னை போற்றி
2. ஓம் அத்திரி முனிவர்க்கு அருளினை போற்றி
3. ஓம் அரனை விரும்பும் அரிவை போற்றி
4. ஓம் இச்சை உணர்வே பிராமி போற்றி
5. ஓம் இனிமை அருளும் இன்பமே போற்றி
6. ஓம் உண்பொருளாகும் சாகம்பரீ போற்றி
7. ஓம் உண்மை ஞான ஒளியே போற்றி
8. ஓம் உண்மை மெய் வாய்மை உருவே போற்றி
9. ஓம் எங்கும் ஆளுமை ஆவாய் போற்றி
10. ஓம் எங்கும் இல்லாதே இருப்பாய் போற்றி
11. ஓம் எல்லா ஆற்றலும் ஆவாய் போற்றி
12. ஓம் எல்லாச் சித்தியும் இயற்றுவாய் போற்றி
13. ஓம் எல்லா நலமும் ஆவாய் போற்றி
14. ஓம் எல்லா நிறமும் ஆவாய் போற்றி
15. ஓம் எளியார்க்கு எளிதாய் இயங்குவாய் போற்றி
16. ஓம் ஒளியில் ஒளியாய் ஒளிர்வாய் போற்றி
17. ஓம் கலைகள் உணர்த்தும் கலைமகள் போற்றி
18. ஓம் காமாட்சியாகிய கன்னி போற்றி
19. ஓம் காமுறக் காரணம் ஆவாய் போற்றி
20. ஓம் காரணமின்றியும் காக்கும் சாம்பவி போற்றி
21. ஓம் குண்டலியாகக் குவிவாய் போற்றி
22. ஓம் குணமற்றதாயும் குறுகுவாய் போற்றி
23. ஓம் குருநாடிக்குரிய கொடியே போற்றி
24. ஓம் குமரனைத் தந்த குமாரீ போற்றி
25. ஓம் குரோதம் குறையா மகேசி போற்றி
26. ஓம் கொடியோர் அழிக்கும் கொற்றவை போற்றி
27. ஓம் கொடியோர் கொடுமை குலைப்பாய் போற்றி
28. ஓம் கொம்பில் பற்றும் கொடியே போற்றி
29. ஓம் கோள்நிலைப் பலன்கள் கொடுப்பாய் போற்றி
30. ஓம் சண்டரைச் சாய்த்த சண்டி போற்றி
31. ஓம் சிங்க வாகனச் சிறப்பே போற்றி
32. ஓம் சிவனார்க்குரிய சக்தி போற்றி
33. ஓம் சுகம்தரச் சுடரும் விழியே போற்றி
34. ஓம் சுகமெலாம் நிறைந்த சுடரே போற்றி
35. ஓம் சுடரில் மின்னும் சுடரே போற்றி
36. ஓம் சுமங்கலியாகும் வடிவே போற்றி
37. ஓம் சுருக்கம் உணர்த்தும் கௌமாரி போற்றி
38. ஓம் சூலம் ஏந்தும் சுடரே போற்றி
39. ஓம் செம்மை சிறந்த திருவே போற்றி
40. ஓம் செயல் வகையாகிய திறமே போற்றி
41. ஓம் செயலுக்கு உரிய முயற்சியே போற்றி

42. ஓம் சோதி வட்டச் சுயம்பே போற்றி
43. ஓம் தடையை விலக்கும் தாயே போற்றி
44. ஓம் தமோ குணத்தைத் தவிர்ப்பாய் போற்றி
45. ஓம் தாமரை வடிவத் தாயே போற்றி
46. ஓம் தாமரை வாழும் செல்வி போற்றி
47. ஓம் தாமரை விரும்பும் தளிரே போற்றி
48. ஓம் தாய்மை சிறக்கும் விளக்கே போற்றி
49. ஓம் தாரா என்னும் தாயே போற்றி
50. ஓம் திருவருள் துர்க்கா பரமே போற்றி
51. ஓம் தீர்த்தமாகத் தெளிவாய் போற்றி
52. ஓம் தூய்மை விளக்கும் துறையே போற்றி
53. ஓம் தேவரும் வணங்கும் தேவி போற்றி
54. ஓம் தொடரும் தொடர்புத் தொகையே போற்றி
55. ஓம் தொண்டர்கள் துன்பம் துடைப்பாய் போற்றி
56. ஓம் நஞ்சை முறிக்கும் நலமே போற்றி
57. ஓம் நல்லோர்க்கு உதவும் நங்கை போற்றி
58. ஓம் நலந்தரு நாண நங்கை போற்றி
59. ஓம் நன்மை உவக்கும் உமையே போற்றி
60. ஓம் நிலவுக் கலையைச் சூடினாய் போற்றி
61. ஓம் நிலைத்த இன்பம் நிகழ்த்துவாய் போற்றி
62. ஓம் நுணுகிய எதிலும் நுழைவாய் போற்றி
63. ஓம் நெஞ்சக்கல்லை நெரித்தாய் போற்றி
64. ஓம் நோயும் வறுமையும் அழிப்பாய் போற்றி
65. ஓம் பகைமை தீர்க்கும் பாரதி போற்றி
66. ஓம் பளிங்கில் நூல்போல் பொலிவாய் போற்றி
67. ஓம் பாரெலாம் காக்கப் பரிவாய் போற்றி
68. ஓம் பாவம் உணர்த்தும் திருமகள் போற்றி
69. ஓம் பாவம் நீக்கும் புண்ணியவதி போற்றி
70. ஓம் பிடர்த்தலைப் பீட மடக்கொடி போற்றி
71. ஓம் பிரிவற நிற்கும் பிடியே போற்றி
72. ஓம் புவனேச்சுவரியாம் புதியாய் போற்றி
73. ஓம் பூசல் புணர்க்கும் புகழே போற்றி
74. ஓம் பெண்மை வடிவப்பேறே போற்றி
75. ஓம் பெரியதற்கெல்லாம் பெரியாய் போற்றி
76. ஓம் பெரிய திருவின் பிராட்டி போற்றி
77. ஓம் பெரியோர் விரும்பும் பெரியாய் போற்றி
78. ஓம் பைரவியாகும் பரமே போற்றி
79. ஓம் மக்கள் பேற்றின் மாணபே போற்றி
80. ஓம் மகாதிரிபுர சுந்தரி போற்றி
81. ஓம் மதர்த்திடச் செய்யும் வாராகி போற்றி
82. ஓம் மலையினும் திண்ணிய மலரே போற்றி
83. ஓம் மனத்தின் உன்னத மணியே போற்றி
84. ஓம் மாகாளியாகும் மகளே போற்றி
85. ஓம் மாதங்க முனிவர் சார்வு போற்றி
86. ஓம் மாய வடிவின் மங்கை போற்றி
87. ஓம் முக்கண்சுடரும் முதல்வி போற்றி
88. ஓம் முக்குணமாக முளைப்பாய் போற்றி
89. ஓம் முச்சொல் முடிவில் முனைவாய் போற்றி
90. ஓம் முப்புரம் எரித்த முதல்வி போற்றி
91. ஓம் மும்மூர்த்திகளாய் முளைப்பாய் போற்றி
92. ஓம் முற்றுச் சொல்லாய் முடிப்பாய் போற்றி
93. ஓம் மூவிதமான சக்தி போற்றி
94. ஓம் மூவிதமான சந்தியே போற்றி
95. ஓம் மூவுலகுள்ளும் வாழ்வாய் போற்றி
96. ஓம் மூன்றடுக்கு உலகைக்காப்பாய் போற்றி
97. ஓம் மூன்று நிறமும் ஆவாய் போற்றி
98. ஓம் யோகத்தமிழாய் உதிப்பாய் போற்றி
99. ஓம் வாக்குத் தமிழாய் வருவாய் போற்றி
100. ஓம் வாராதே வர வல்லாய் போற்றி
101. ஓம் வாழ்வை வகுக்கும் வனதுர்க்கை போற்றி
102. ஓம் விசாலாட்சியாய் விளங்குவாய் போற்றி
103. ஓம் விருப்பம் விளைக்கும் லலிதா போற்றி
104. ஓம் விருப்பம் முடிக்கும் விசையே போற்றி
105. ஓம் வையம் காக்கும் வைணவி போற்றி
106. ஓம் வெற்றிவேல் தடக்கை கொண்டாய் போற்றி
107. ஓம் ''ஹம் - ஸம்'' என்னும் ஓசையே போற்றி
108. ஓம் ''ஹ்ரீம்'' எனும் ஓசைக்கிளியே போற்றி போற்றி.

### பாடல் - அருள்மிகு கொற்றவை

ஆனைத் தோல் போர்த்துப் புலியினுரியுடுத்துக்
கானத்து எருமைக் கருந்தலை மேல் நின்றாயால்
வானோர் வணங்க மறைமேல் மறையாகி
ஞானக் கொழுந்தாய் நடுக்கின்றியே நிற்பாய்.

வலம்படு கொற்றத்து வாய்வாள் கொற்றவை
இரண்டு வேறு உருவின் திரண்டதோள் அவுணன்
தலைமிசை நின்ற தையல் பலர்தொழும்
அமரி குமரி கவுரி சமரி... அருளினள்

– சிலப்பதிகாரம் –

### வாழ்த்துடன் பிரசாதம் அளித்தல்

................ அம்மனின் அருள் முழுமையாக உங்களுக்குக் கிடைப்பதாகுக. உங்களின் எல்லா விருப்பமும் நிறைவேறுக. மங்கலம் உண்டாகுக.

★★★

# பெரிய புராணத்தில் வரலாற்றுச் சிறப்பு

– கலைமாமணி கவிஞர் கே.பி. அறிவானந்தம்

பெரிய புராணத்தில் வரலாற்றுச் சிறப்பு ''எங்கே இருக்கிறது?'' என்ற கேள்வியை எழுப்பி அதற்கு விடை காண முயல்வதை விட; ''எங்கே இல்லை?'' என்ற கேள்வியை எழுப்பினால் விடை எளிதாகக் கிடைத்துவிடும். ஏனெனில் பெரிய புராணம் முழுவதுமே வரலாறுதான்!

சேக்கிழார் பெருமான் சோழமாமன்னனின் அமைச்சராக விளங்கிய காரணத்தால், நாயன்மார்களின் வரலாறு நடந்த ஒவ்வொரு இடத்திற்கும் செல்ல முடிந்திருக்கிறது. அந்தந்தச் சூழலை அங்காங்கே இருந்து அனுபவிக்க முடிந்திருக்கிறது.

அதனால்தான் அவர் ஒரு ஓர் அரசனைப் பற்றிச் சொல்லும்போது நாமும் அந்த ராஜவீதிகளில் உலாவர முடிகிறது. அந்தணர் வாழும் பகுதியைப் பற்றிச் சொல்லும்போது வேத ஒலிகளைக் கேட்க முடிகிறது. கண்ணப்ப நாயனாரின் வேடச்சேரியைப் பற்றிக் கூறும்போது அங்கு அறுக்கப்படும் மாமிச வாடை தாங்காமல் மூக்கை மூடிக்கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகிறது.

ஒரு காவியம் பாடப்படும்போது அதைப் பாடச்செய்த மன்னனைப் பற்றிப் பாடுவது பாடுபவரின் பண்புக்கும் நன்றிக்கும் அடையாளமாகிறது. அவ்வகையில் சேக்கிழார் பெருமான் இரண்டாம் குலோத்துங்கனான அநபாயச் சோழனைப்பற்றி பதினோரு இடங்களில் பாடியிருக்கிறார் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அவற்றுள் மிகச்சிறப்பாகக் குறிக்கப்பெறும் இடம் சண்டேசுரநாயனார் புராணத்தில் இருக்கிறது. சோழமன்னர்கள் முடிசூட்டிக்கொள்ளும் ஐந்து ஊர்களில் ஒன்றான சேய்ஞலூரைப் பற்றிய பாடல் அது. மற்றவை பூம்புகார், திருவாரூர், உறையூர், கருவூர்.

இனிபாடலைப் பார்ப்போம்!

சென்னி அபயன் குலோத்துங்க
சோழன் தில்லைத் திருவெல்லை
பொன்னின் மயமாக் கியவளவர்
போரே றென்றும் புவிகாக்கும்
மன்னர் பெருமான் அநபாயன்
வருந்தொன் மரபின் முடிசூட்டும்
தன்மை நிலவும் பதியைந்தில்
ஒன்றாய் விளங்கும் தகைத்ததவ்வூர்

காஞ்சியைப் பற்றிப் பாடும்போது அது உருவானதே கரிகாலனால்தான் என்ற வரலாற்றை அற்புதமாகப் பாடுகிறார் சேக்கிழார் பெருமான். வேடன் ஒருவன் இமயத்தை வெல்வதற்காகச் சென்று கொண்டிருந்த கரிகாலனிடம் வந்து சொல்ல, அங்கு சென்று கண்டு நகரை உருவாக்கி, மக்களைக் குடியிருத்தினான் என்கிறது பாடல்.

என்றுமுள்ள இந்நகர் கலியுகத்தில்
இலங்குவேள் கரிகால் பெருவளத்தோன்
வன்திறல் புலி இமயமால் வரைமேல்
வைக்கஏ குவோன்தனக் கிதன்வளமை
சென்றுவேடன் முன்கண் டுரைசெய்யத்
திருந்துகாதம் நான்குட் படவகுத்துக்
குன்றுபோலு மாமதில் படைபோக்கிக்
குடியிருத்தின கொள்கையின் விளங்கும்

மெய்ப்பொருள் நானார் வரலாற்றில் பகைவனான முத்தநாதன் சினடியார் வேடத்தில் வந்து நாயனாரைக் கொன்ற பகுதி உள்ளத்தை உருக்கக் கூடியது. நாயனாரின் மெய்க்காப்பாளன் தத்தன், கொடியவனான முத்தநாதனைக் கொல்ல முயல, மெய்ப்பொருள் நாயனார் உயிர்பிரியும் தருணத்திலும் அதைத் தடுத்தார் என்பதை ''தத்தா நமர் என்று தடுத்து வீழ்ந்தார்'' என்கிறார் சேக்கிழார் பெருமான்.

'தத்தா நமர்' என்ற சொற்கள் தஞ்சைப் பெரிய கோயிலில் இராசேந்திர சோழன் காலத்து மூன்றாம் ஆண்டின் கல்வெட்டில் உள்ளது என்பதை அறியும் போது, சேக்கிழார் பெருமான் ஒவ்வொன்றையும் எவ்வளவு வரலாற்றுணர்வோடு பாடியிருக்கிறார் என்பதை உணரமுடிகிறது.

''தென்னவன் மூவேந்த வேளான் யாண்டு மூன்றாவது வரை செய்வித்த செப்புப் பிரதிமங்கள் பாதாதி கேசாந்தம் இருப்பதிற்று விரல் உசரத்து கனமாகச் செய்த தத்தா நமரேகாண் என்ற மிலாடுடையார்'' என்பது கல்வெட்டின் வாசகமாகும்.

நெல்வேலி வென்ற நின்றசீர் நெடுமாறன் சமணனாகியிருந்து பின்னர் திருஞானசம்பந்தரால் சைவத்திற்குத் திரும்பியதும், அதேபோல் சமணனாகயிருந்த மகேந்திரவர்மபல்லவன் திருநாவுக்கரசரால் சைவ

னாக மாறியதும் பெரியபுராணத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சிகளாகும்.

சைவத்திற்கு வந்த மகேந்திரவர்மன் பற்றி திருச்சிராப்பள்ளி மலைக்குகை மண்டபத்தில் வட மொழியில் ஒரு கல்வெட்டு உள்ளது.

''குணபர நாமாணி ராஜன்யனேன லிங்கேன
லிங்கினிக்ஞானம்
ப்ரதமாம் சிராயலோகே விபக்ஷங்ருத்தே
பரர்வருத்தம்!!''

''விபக்ஷவிருத்தி எனும் சமணத்திலிருந்து சைவத்திற்குத் திரும்பி இலிங்கத்தை வழிபடும் குண பரனின் ஞானம் நிலை நிற்பதாக'' என்பது இதன் பொருள். குணபரன் என்பது மகேந்திரவர்மனின் சிறப்புப் பெயர்களில் ஒன்றாகும்.

அப்பர் சூலைநோய் நீங்கி அருள்பெற்ற திருவதிகை வீரட்டானத்தில் அவருக்கென ஒரு தனி ஆலயம், கலிங்கத்தை வென்ற கருணாகரத் தொண்டைமானால் கட்டப்பட்டது. அதில் உள்ள கல்வெட்டுகளும் பெரியபுராணத்தின் வரலாற்றுச் சிறப்புக்குச் சான்றாக விளங்குகின்றன.

அப்பர் திருவடிப்பேறு எய்திய திருப்புக லூரில் உள்ள ஒரு கல்வெட்டு அப்பரை ''குளிச்செழுந்த நாயனார்'' என்கிறது. அப்பர் கயிலையில் உள்ள பொய்கையில் மூழ்கி திருவையாறில் உள்ள குளத்தில் எழுந்ததைப்பற்றி பெரியபுராணம் கூறும் நிகழ்ச்சிக்கு இது கட்டியம் கூறுகிறது.

புட்பத்திருத்தொண்டால் முக்தி பெற்ற முருக நாயனாருக்கு 'நம்பி முருகன் திருமடம்' இருந்ததை யும், திருநீலகண்ட யாழ்ப்பாணர் 'யாழ்மூரி நாயனார்' என குறிக்கப்பட்டதையும் கல்வெட்டுகள் பறை சாற்றுகின்றன.

சிறுத்தொண்டர் என்று சிறப்புப்பெற்ற பரஞ் சோதி தளபதியாகயிருந்து நடத்திய வாதாபிப்போர் கி.பி. 642ல் நடைபெற்றது. அதில் பாதிக்கப்பட்ட சாளுக்கியரின் கர்நூல் பட்டயம் அந்தப்பேற்றி னால் ஏற்பட்ட அழிவையும், அதனால் அவர்களுக் குப் பல்லவர்மீது ஏற்பட்ட வஞ்சத்தையும் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

பைரவ விரதம் என்பது சிவாகமம் சொல்லும் விதிப்படி சித்திரைப்பரணி-ஐப்பசிப்பரணி ஆகியவை களுக்குரிய விரதமாகும். ஆக சரியாக ஆறுமாத இடை வெளி. இதை உணர்த்தும் வகையில் சிறுத்தொண்ட நாயனார் வரலாற்றில் பைரவராக வரும் சிவ பெருமான் ''ஆறுதிங்கட்கொருமுறை யாம் உண் போம்'' என்று கூறுவதாக அமைத்திருப்பது எவ் வளவு அற்புதம்! சிறுத்தொண்டர் முக்தியடைந்ததும் சித்திரைப்பரணிதான் என்பதும், அன்றுதான் திருச் செங்காட்டங்குடி திருக்கோயிலில் அமுதுபடையல் எனும் வரலாற்று விழா நடக்கிறது என்பதும் பெரிய புராணத்தின் வரலாற்றுச் சிறப்புக்கு ஆதாரமாகும்.

மூன்றாவது தமிழ்ச்சங்கத்தில் நக்கீரர், கபிலர், பரணர் உள்ளிட்ட நாற்பத்தொன்பது புலவர்கள் இருந்தார்கள் என்பதும், பொய்யடிமை இல்லாத புலவர் என்று சேக்கிழார் பெருமான் அவர்களைத் தான் குறிப்பிட்டார் என்பதும் நாம் அறிந்ததே. ''சங்கமிரீயினார் கடல் கொள்ளப்பட்டுப் போந்திருந்த முடத்திருமாறன் முதலாக உக்கிரப்பெருவழுதி ஈறாக நாற்பத்தொன்பதின்மரென்ப.'' என்ற இறையனார் அகப்பொருள் உரையே இதற்குச் சான்றாகும்.

இவற்றோடு மூவர் முதலிகளின் தேவாரப் பாடல்களும் சேக்கிழார் பெருமானுக்கு அகச்சான்று களாக அமைந்துள்ளன. உதாரணத்திற்கு ஒவ்வொரு பாடலை எடுத்துக்கொண்டாலே போதுமே!

ஞானசம்பந்தப் பெருமான் அம்மையப்பர் தந்த அருட்பாலை உண்ட வரலாற்றை

''போதையார் பொற்கிண்ணத் தடிசில் பொல்லாதென
தாதையார் முனிவுறத் தானெனை யாண்டவன்''

என்ற அவரது வாக்கே உறுதிப்படுத்துகிறது. சுந்தர மூர்த்தி சுவாமிகளை இறைவன் ஓலைகொடுத்து ஆட்கொண்ட வரலாற்றை

''வெண்ணெய் நல்லூரில் அற்புதப்பழ
ஆவணம்காட்டி
அடியனாய் என்னை ஆளதுகொண்ட
நற்பதத்தினை...''

என்ற அரிய வரிகள் உறுதிப்படுத்துகின்றன. அப்ப ரடிகள் தன்னைக் காத்தாள்பவர் இல்லாததால், தான் புறசமயத்தில் புகநேர்ந்தது என்பதை

''காத்தாள்பவர் காவலிகழ்ந் தமையால்
கரைநின்றவர் கண்டுகொ ளென்றுசொல்லி
நீத்தாய கயம்புக நூக்கியிட
நிலைக்கொள்ளும் வழித்துறை ஒன்றறியேன்''

என்று ஒப்புதல் வாக்குமூலம் தருகிறார். இவற்றையெல்லாம் ஆய்ந்து தேர்ந்துதான் சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்தைப் பாடியிருக்கிறார். பெரியபுராணம் முழுதுமே வரலாற்றுச் சிறப்பு மிக்கதுதான் என்பதற்கு இவையே ஆதாரமல்லவா?

# சிவானந்த லஹரியில் மனம்

- டாக்டர் டி. செல்வராஜ்

ஸ்ரீ ஆதிசங்கரர் பகவத் பாதர் அவர்கள் மனிதப் பிறவிகள் உய்ய வேண்டும் என்பதற்காக அருள் கொண்டு அருளிய நூல் ''சிவானந்த லஹரி''. லஹரி = அலைகள். ''சிவானந்தக்கடலில் வீசுகின்ற அலைகள்'' என்பது நூற்பெயரின் பொருள்.

சான்றோர்கள், மனம் ஒரு குரங்கு - வெறி நாய் - கல் - இரும்பு - தேர் - தாமரை - ஊசல் - காடு - கோயில் என்று கற்பனை செய்து பாடினர். ஒரு கருத்தை நேராகக் கூறுவதைக் காட்டிலும் உருவக நயத்துடன் கூறினால், அக்கருத்து அழகாகவும் இருக்கும்; தெளிவாகவும் புரியும். எனவே, மனத்தைப்பல பொருள்களாக உருவகப்படுத்திக் கருத்துகளை உணர்த்துகின்ற இலக்கிய உத்தியை அனைவரும் பயன்படுத்துகின்றனர்.

ஸ்ரீ பகவத் பாதர், சிவானந்த லஹரியில் மனத்தைக் கும்பம், தாமரை முதலிய பல பொருள்களாக உருவகப்படுத்துகிறார். சிவானந்த அலைகள் அள்ளி அள்ளித்தெளிக்கின்ற, மனத்தைப்பற்றிய கற்பனை முத்துகள் அற்புதமானவை. இந்த முத்துகளை அழகிய மாலைகளாகக் கோத்து, ஆண்டவனது திருவடிகளில் அணிவிப்போம்.

ஸ்ரீபகவத்பாதர், மனத்தை மூன்று நிலைகளில் பாடுகின்றார்.

1. மனத்தை ஒரு பொருளாக உருவகப்படுத்தி அதில் இறைவனைக்குடியேற்றுகின்றார்.
2. இறைவனது திருவடிகளில் மனத்தை அடைக்கலமாகக் கிடத்துகின்றார்.
3. அடங்காத மனத்தை அடக்கும்படி இறைவனிடம் வேண்டுகின்றார்.

இவை மூன்று நிலைகளைப்பற்றி இனித் தனித்தனியே காணலாம்.

### 1. மனத்தில் குடியேறும் இறைவன்.

**1. மனம் ஒரு பூரண கும்பம்:** பூரண கும்பம் எப்போதும் மங்கலமானது. பூசைகளிலும், சிறப்பு வழிபாடுகளிலும், வேள்விகளிலும், கும்பாபிடேகத்திலும் பூரண கும்பத்திற்கு முதலிடமும், சிறப்பிடமும் உண்டு. கோயில்களில், அடியார்களையும் சான்றோர்களையும் பூரண கும்ப மரியாதையுடன் வரவேற்பது வழக்கமும், முறையும் ஆகும். வரலட்சுமி விரதம் முதலிய விரத பூசைகளில் பூரண கும்பத்தை எழுந்தருளச் செய்து, அதில் தெய்வங்களை ஆவாகனம் செய்து வழிபடுகின்றனர்.

ஸ்ரீபகவத்பாதர் மனத்தைப் பூரண கும்பம் என்று போற்றுகின்றார்.

''சிவபெருமானே! எனது மனம் ஒரு பூரண கும்பம் (பொற்கலசம்). அதில் பக்தி என்ற நூலிழைகள் அழகாகச் சுற்றப்பட்டுள்ளன. ஆனந்தம் என்ற நீர் நிறைந்துள்ளது. உனது மலரடிகளாகிய மாவிலைகள் பொருந்தி இருக்கின்றன. ஞானமாகிய தேங்காய் கும்பத்தின்மீது வைக்கப்படுகிறது.

எண்வகைப்பட்ட குணங்களைத் தரக்கூடிய நமச்சிவாய என்ற ஐந்தெழுந்து மந்திரத்தை ஓதியும், எனது உடல் என்ற வீடானது தூய்மை அடையவும், மங்கலமான மோட்சத்தை அடைந்து நிலைபெறவும், புண்ணியாவாசனம் என்ற நல்ல காரியத்தை நான் பக்தியுடன் செய்கிறேன்.'' (பாடல் 36)

சாதாரணமாக, பொற்கலசத்தை மனித உடம்பு என்றும், நூலிழைகளை நரம்புகள் என்றும், தண்ணீரை உயிர் என்றும், தேங்காயைத் தெய்வம் என்றும், தெய்வத்தின் திருவருளை உயிரில் இறக்கும் சாதனமாக மாவிலைகள் செயல்படுகின்றன என்றும் தத்துவார்த்தங்கள் கூறப்படுகின்றன. ஸ்ரீ பகவத்பாதர் உடலைப் பூரண கும்பம் என்று கூறாமல், மனத்தைப் பூரண கும்பம் என்ற வருணிப்பது ஒரு புதுமை.

**2. மனம் ஒரு தாமரை:** பூக்களில் சிறந்த பூ தாமரைப்பூ. பூ என்றாலே, அச்சொல் தாமரையைத் தான் குறிக்கும். மனத்தைத் தாமரை என்று உயர்த்திக்கூறுவது வழக்கம். இதய கமலம், தாமரை நெஞ்சம் முதலிய தொடர்கள் மனத்திற்கும் தாமரைக்கும் இடையிலுள்ள இணைப்பைக் காட்டுகின்றன.

கவிழ்த்த தாமரை மொட்டுப் போல இருப்பது இதயம் - மனம். முன்னரே, தாமரை போன்ற மனம்

என்றும் மனத்தாமரை என்றும் பலர் பாடினர். ஸ்ரீபகவத் பாதர் மனம் ஒரு தாமரை என்று பல பாடல்களில் பாடுகிறார். அவற்றில் ஒரு புதுமைப்பொலிவு உண்டு.

''பரமேஸ்வரனே! உன்னை மனத்தாமரையால் வழிபட்டே மிக்க இன்பத்துடன் இருக்கலாம். ஆனால் பலர் மனத்தாமரையை மறந்து காடுகளிலும், மடுக்களிலும், மலைகளிலும் திரிந்து மணம் தரும் மலர்களைப்பறிக்க அலைகின்றார்களே''. (பாடல் 9)

மென்மையான பக்தி மணத்தை மனத்தாமரை தருவதைப்போல மற்ற மலர்கள் தருவதில்லை. மேலும், மனத்தாமரையை விட மணத்தாமரை உயர்ந்ததில்லை.

''பிரமச்சரியமோ, கிருகஸ்தமோ, சந்நியாசமோ எத்தகைய வாழ்வு முறையாக இருந்தால் என்ன? அவை பேரின்பச்சுவையைத்தருமா? ஆனால், மனத்தாமரை மலரைச் சிவபெருமானுக்கே அர்ப்பணித்து, அவனுக்கு உரியதாகவே அதனை அமைத்து விட்டால், அவர்களது முன் தீவினைகள் ஒழியும்; வாழ்வும் சிறக்கும்'' (பாடல் 11)

ஆகவே, மனத்தாமரை என்பது இறைவனது ஆசனம்; அவனை அர்ச்சிக்கப்பயன்படுகின்ற அருமையான மலரும் அதுவே. ''அதில் சிவன் என்ற ராஜ வண்டு வாழ வேண்டும்'' என்று விரும்புகிறார். (பாடல் 51)

***3. மனம் ஒரு குகை :*** பக்தர்களின் மனக் குகையில் குடியிருப்பதால் முருகனுக்குக் 'குகன்' என்பது ஒரு பெயர்.

மனமும் குகையும் இருண்டவை; வன்மையானவை; தீயன வந்து புகுவதற்கே இருப்பிடமானவை; விரைவில் பிரகாசமான ஒளியைப் பெறாதவை; கரடு முரடானவை. எனவே, மனத்தைக் குகை என்று புனைந்துரைப்பது பொருத்தமே.

ஸ்ரீபகவத் பாதரது மனக்குகையில் 'சிவசிங்கம்' ஒன்று குடியிருக்கிறதாம். ''அது முன்னரே கஜமுக அரசன் என்ற யானையை வென்றது; வியாக்கிராசுரன் என்ற புலியைக்கொன்றது; அவற்றின் தோல்களை உரித்த கூரிய நகங்களைக் கொண்டது. மலையில் வாழ்ந்தது. ஐந்து தலைகளைக் கொண்டது. வெண்ணிற முடையது. எமன் ஏறுகின்ற எருமைக் கடாவையும் எதிர்த்துக் கொல்லக்கூடிய வலிமை பொருந்தியது. அத்தகைய சிவசிங்கம் எனது மனக் குகையில் குடியேறிக் குடியிருப்பதால் இனி எனக்கு அச்சமும் இல்லை; வேறு பாதுகாப்பு தேவையும் இல்லை.'' (பாடல் 44)

சிவசிங்கம் தங்கப் பொருத்தமான இடம் மனக்குகை ஆகும்.

***4. மனம் ஒரு காடு :*** நல்லனவும், தீயனவும் கலந்து செறிந்து, மனத்திலும் காட்டிலும் நிறைந்திருக்கின்றன.

''கயிலாய மலையில் வாழ்கின்ற கிராத முதல்வனே! விலங்கினங்களை வேட்டையாடுவதில் வேட்கை மிக்கவனே! என்னிடம் வருவாய். எனது மனமோ எவரும் (எவையும்) புகமுடியாத ஒரு பெரிய காடு. அதில், சினம், மதம், காமம் முதலிய மான்களின் கூட்டங்கள் பல திரிகின்றன. நீயோ விநோதமான வேட்டைகளில் ஈடுபடுகின்றாய். அப்போது உனது அம்புகளால் அந்த மான்கூட்டங்கள் கொலை செய்யப்படுகின்றன. இத்தகைய வேட்டையில் உனக்கு விருப்பமான நற்பலன்கள் கிடைக்குமே.'' (பாடல்43)

சிவபெருமானது சிறந்த மூர்த்தங்கள் இருபத்தைந்தில் கிராத வடிவம் (வேடர் கோலம்) ஒன்று. இந்த வேடனை வேண்டித்தமது மனக்காட்டில் குறிக் கோளற்றுத்திரிகின்ற மான் கூட்டங்களை ஒழிக்க முற்படுகின்றார் ஸ்ரீபகவத் பாதர்.

***5. மனம் ஒரு வானம் :*** வானம் எங்கும் பரந்தது. அந்த வானத்தையே அகப்படுத்திக் கொள்ளக்

**ஓரடிக்குப் பத்தடி**

நாம் இறைவனை நோக்கி ஓரடி எடுத்துவைத்தால் இறைவன் நம்மை நோக்கிப் பத்து அடி முன்னே வருவான்

***- இராமகிருஷ்ணப் பரமஹம்சர்***

கூடிய பேராற்றல் மனத்திற்கு உண்டு. மனம் விசால மானது; பரந்தது; அனைத்தையும் உள்ளடக்கக்கூடி யது; தெளிவானது வானத்தைப் போல.

வானம் சூரிய ஒளியால் ஒளி பெறும். சூரிய ஒளி குறைந்தால் இருளும். மனமும் ஞானத்தால் ஒளி பெறும்; அஞ்ஞானத்தால் இருளும்.

வண்ண மேகக்கூட்டங்கள் வானத்தை மறைக் கும். எண்ண மோக ஓட்டங்கள் மனத்தின் தெளிவைக் குறைக்கும். எனவே, மனம் வானமே.

''பக்தர்களின் மன வானத்தில் பரமேசுவரன் பிரசன்னமாகின்றான். அங்கே ஆனந்தக்கடல் பொங் கிக் குதித்துத்ததும்புகிறது''. (பாடல் 38)

பரமன் இருக்குமிடத்தில் பரமானந்தமும் திகழும் என்று அருளுகின்றார் ஸ்ரீபகவத் பாதர்.

***6. மனம் ஒரு நிலம் :*** மனத்தை வானம் என்று புனைந்தவர், அதை நிலம் என்றும் வருணிக்கின்றார். மனம், நிலத்தைப்போல விரிந்திருக்க வேண்டும்; பண்படுத்த, பண்படுத்த பல பயன்களைத்தர வேண் டும்; தீய களைகள் களையப்பட வேண்டும்; நல்லன விளைய வேண்டும். மிகச்சிறந்தவை விதைக்கப்பட வேண்டும்; அறுவடை செய்யப்பட வேண்டும். ஆகவே, மனம் ஒரு நிலம்.

''உனது சரிதம் ஒரு பெரிய கடல். அந்த நீர்ப் பெருக்கைப்புத்தி என்ற ஏற்றத்தால், வார்த்தை என்ற குடத்தால் இறைத்தேன். அது கவிதை என்ற வாய்க் காலின் வழியாக ஓடியது. பக்தி விதைகள் விதைக்கப் பட்ட மனம் என்ற நிலத்தில் பாய்ந்தது. இனிப் பக்திப்பயிர்கள் மிக வளர்ந்து நல்ல பயன்களைத் தரும். எனவே, உனக்குச் சேவகம் செய்கின்ற எனக்கு இனி மேல் பஞ்சமே இல்லை.'' (பாடல் 40)

மனத்தில் பக்திப்பயிரே விளைய வேண்டும் அதற்கு இறைவனது இன்னருள் வேண்டும் என்று வேண்டுகின்றார் ஸ்ரீபகவத் பாதர்.

***7. மனம் ஒரு தோட்டம் :*** மனத்தை ஒரு நிலம் என்று உரைத்த ஸ்ரீ பகவத் பாதர் அதை ஒரு தோட்டம் என்று போற்றுகின்றார்.

''தூய்மையான மனம் என்ற தோட்டத்தில் சிவத்தியானம் என்ற வசந்த காலம் நிலைபெறுகிறது. பாவங்கள் என்ற பழுப்பு இலைகள் கழிகின்றன. புண்ணியங்கள் என்ற தூய மென்மையான தளிர்கள் தளிர்க்கின்றன. பக்தி என்ற கொடிகள் படர்கின்றன. நற்குணங்கள் என்ற அரும்புகள் அரும்புகின்றன. ஜபம் செய்வதற்குரிய மந்திரச் சொற்கள் என்ற மலர் கள் மலர்கின்றன. சற்குணங்கள் என்ற மணங்கள் எங்கும் மணக்கின்றன. ஞானம், ஆனந்தம் முதலிய பற்பல சுவைகளைத் தருகின்ற பரம ஞானப்பழங் கள் பழுக்கின்றன.'' (பாடலம் 47)

'தியானத்தால் பக்தி மலர்கின்றது. பக்தியால் ஞானப்பழங்கள் பழுக்கின்றன' என்றார். மனம் ஒரு தோட்டம் முதலிய உருவகங்களால், இந்தக்கருத்து அருமையாக விளக்கப்பட்டுள்ளது.

***8. மனம் ஒரு பந்தல் :*** பக்தியொன்றே மோட்சப் பலன்களைத் தரக்கூடியது என்ற கருத்தை, ஸ்ரீபகவத்பாதர் மனம் ஒரு பந்தல் என்ற உருவகத் தின் மூலம் தெளிவாக்குகிறார்.

''சிவபெருமானின் திருவடித்தாமரையாகிய பாத்தியில் ஆனந்தம் என்ற தண்ணீர் பாய்ந்தது. அத னால், பக்திக்கொடி ஒன்று, எனது மனமாகிய பந்தலில் படர்ந்தது. அது திறம் என்ற கொழு கொம்பைப்பற்றியபடி ஓங்கிச் செழித்தது. பூக்கள் பூத்துக் குலுங்கக்கூடிய கிளைகளும், உப கிளை களும் கிளைத்தன. இவை நிலையானதும், எனக்கு மிக விருப்பமானதுமான மோட்சப்பலன் என்ற நற்பழங்களைத் தருவதாக.'' (பாடல் 49)

***9. மனம் ஒரு தடாகம்:*** ''சங்கரனின் திருவடித் தாமரைகளாகிய வானத்தில் அருள் 'மேகக்கூட்டங் கள் நிறைந்துள்ளன. பக்தன், பக்தியுடன் பல சேவை களைச் செய்கின்ற போது, அருள் மழை பொழி கின்றது. அது பக்தனது மனம் என்ற தடாகத்தில் நிறைகிறது. அப்போது அவனது பிறவிப்பயிர் மிக்க பயனுடையதாக அமைகின்றது. அது பிறவிப்பய னைப்பெற இதைத்தவிர வேறு எத்தகைய உபாயமும் இல்லை.'' (பாடல் 76)

இறைவனுக்குப் பக்தியுடன் பல சேவை களைச் செய்து, அவனை வேண்டி, அவனது அரு ளைப் பெற்றுப் பிறவிப்பயன்களை அனுபவிப் பதே சிறந்த உபாயம் என்றார் ஸ்ரீபகவத் பாதர். அருள் மழையை ஏற்கின்ற மனம் ஒரு தடாகம் என்பது சிறந்த மற்றொரு கற்பனை.

***10. மனம் ஒரு கோட்டை :*** மனத்திலே ஒருவன் கற்பனை செய்தால் ''அவன் மனக் கோட்டை கட்டுகிறான்'' என்று பிறர் நகைப்பது வழக்கம். மனத் திலே கட்டுகின்ற கோட்டை மனக்கோட்டை. ஸ்ரீ பகவத் பாதர் அந்த மனத்தையே கோட்டை என்று கூறி, அதில் வாழ்வதற்காக இறைவனை வரவேற் கின்றார்.

''அகழியின் ஆழத்தைப்போல மனத்திற்கும் ஆழமுண்டு. தைரியம் என்ற மதில்களும், முக்குணம் என்ற நட்புப்படைகளும், பல இந்திரியக்கூட்டங் களான வாசல்களும், விந்தையாய் விளங்குகின்ற பல பொருள்களும் நிறைந்து விளங்குகின்றது எனது மனம் என்ற கோட்டை. அதில் நிலைத்திருந்து வாசம் செய்ய வருவாய் கயிலை மலைவாசனே.'' (பாடல் 42)

***11. மனம் ஒரு நகரம் :*** ''சிவபெருமான் எனது மனத்தாமரையாகிய மாநகரத்தில் பொருந்தியிருந் தால், (தவம், தயவு, ஆசாரம், சத்தியம் என்ற) நான்கு கால்களைக் கொண்ட தரும தேவதை செழிக்கும்; நிலங்களில் பொன் விளையும்; காமம் முதலிய ஆறு வகைப்பட்ட ஆசைகள் அறவே அகலும்; மங்கலம் தங்கிப் பொங்கும்; ஞானம், ஆனந்தம் முதலிய மூலிகைகள் தழைக்கும்'' (பாடல் 39)

மேற்கண்ட பாடலில் மனத்தின் இலக்கணங் களையும், மாநகரத்தின் மாண்புகளையும் சுருங்கக் கூறியிருப்பது தெரிந்து கொள்ளத்தக்கது.

***12. மனம் ஒரு கூடாரம் :*** அடிக்கடி இடம் பெயரும் பண்பு மனத்திற்கும் கூடாரத்திற்கும் பொது. மனம் ஒரு கூடாரம் என்ற ஸ்ரீ பகவத் பாதர், கோட் டையில் தங்கினால் மட்டும் போதாது, இந்தக் கூடாரத் திலும் வந்து, நிலைத்துத் தங்க வேண்டும் என்று வேண்டுகின்றார்.

''எனது குற்றமற்ற மனம் ஒரு கூடாரம். தைரியம் என்பது அதன் தூண். ரஜோ குணம், தமோ குணம், சத்துவ குணம் என்ற மூன்று குணங்களும் அந்தக்கூடாரத்தைக் கட்டத்தக்க கயிறுகள். மனக் கூடாரம் எங்கும் நினைத்தபடி ஓடக்கூடியது. ஓவியக் கோலங்கள் உடையது. மணப் பொருள்கள் நிறைந் தது. நாளும் நல்வழியில் இயங்குகின்ற அந்த மனக் கூடாரத்தில், உமையொரு பாகனே! நீ வந்து தங்க வேண்டும்.'' (பாடல் 21)

***13. மனம் ஓர் அந்தப்புரம் :*** ''என் புத்தி ஒரு கன்னிப்பெண். அந்த அமுதத்தை உன்னிடமே ஒப் படைக்க, ஒப்புக் கொள்கின்றேன். நீ அவளை ஏற்றுக் கொள். அவள் தருகின்ற சுகங்களை அனுபவித்துக் கொண்டு எனது மனத்தாமரை என்ற அந்தப்புரத்தில் (வீட்டில்) எப்போதும் வாழ்வாயாக'' - (பாடல் 84)

உயிர் இறைவனுடன் இரண்டறக் கலந்து, வீடுபேறடைந்து, பேரின்பத்தைப் பெற வேண்டும் என்ற அத்துவைதக்கருத்தை ஸ்ரீபகவத் பாதர் இந்தப் பாடலில் உணர்த்துகின்றார். புத்தி - உயிர்.

***14. மனம் ஒரு பாதை :*** மற்றொரு சிறந்த கற்பனை, இது. பாதை சில போது நேரானது; சில போது கோணல் வளைவுகளைக் கொண்டது. சில போது சீரானது; சிலபோது மேடு பள்ளங்கள் நிறைந்தது; கரடு முரடானது. பாதை எப்படி இருந் தாலும் முடிவில் ஓரிடத்தை அடைந்ததும் முற் றுப்பெறுகிறது. ஒரு குறிக்கோளை நோக்கிச் செல் கின்ற முக்கியப்பண்பு பாதைக்குரியது. இந்தப் பண்புகள் அனைத்தும் மனத்துக்கும் இருப்பதால், ''மனம் ஒரு பாதை'' என உருவாகப்படுத்துவது மிகவும் பொருத்தமானது.

''சங்கரனே! உனது திருவடிகள் கரடு முரடான மலைப்பாதையில் நடந்து நடந்து பழக்கப்பட்டன அல்லவா? அவை எனது மனப்பாதையிலும் நடக்கக் கூடிய தகுதியுடையவை. உனது திருவடிகளை ஏந்திக் கொள்கின்ற பொருத்தம் எனது மனப்பாதைக்கும் உள்ளது.'' (பாடல் 95) என்று ஸ்ரீ பகவத் பாதர், தமது மனப்பாதையில் உலா வருமாறு இறைவனை இறைஞ்சுகிறார். பாதை கடினமானது. பகவான் கடப் பதற்கு எளிமையானது.

***15. மனம் ஒரு பெட்டி :*** ஸ்ரீபகவத் பாதர் தமது மனம் என்ற பெட்டியில் இறைவனது திருவடித் தாமரைகளை வைத்து, அந்தப் பெட்டியில் நிறைந் துள்ள தீய நாற்றங்களை முற்றிலும் ஒழிக்க முனை கின்றார்.

''எனது மனம் என்ற பெட்டியில் இருக்கின்ற ஆசை, பாசம், சினம் முதலிய கொடுமையான தீய நாற்றங்களை, சிவபெருமானது, நல்ல மணத்தைத்

## இறைவன் எங்கே இல்லை?

"God is Nowhere" எனக் கூறிவந்த நாத்திகன் ஒருவன் அவனருளால் அவன் இருக்கும் உண்மையைத் தெளிந்து கொண்ட பிறகு "'God is Now here"' என்று கூறலானான்.

இறைவன் எங்கும் இல்லை என்பது அறியாமை; இறைவன் எங்கே இல்லை என்பதே பகுத்தறிவு ஆகும்.

தரக்கூடிய திருவடித்தாமரைகள் போக்க வேண்டும்'' என்பது அவரது விண்ணப்பம் (பாடல் 74)

*16. மனம் ஒரு குதிரை :* காரணம்? ஸ்ரீ பகவத் பாதரே விவரிக்கின்றார்.

''எனது மனம் ஒரு குதிரை. அது நளினமானது. விரைந்து ஓடக்கூடியது. என்னை நாடி வந்தவர்களது இங்கிதங்களை உணரக்கூடியது. மிளிர்கின்ற களிப் பால் பொலிவது. இகழ்ச்சியால் எனக்கு ஏற்படக் கூடிய குறைகளை விலக்க வல்லது. எல்லா இலக் கணங்களும் நிறைந்தது. காளை ஏறி, அதைக்கடத்தும் கடவுளே! எனது மனக்குதிரையிலும் ஏறி, அதைச் செலுத்தும்படி வேண்டுகிறேன். (பாடல் 75)

மனம் ஒரு குதிரை; அதை இறைவன் தனது வாகனமாகப் பயன்ப்டுத்த வேண்டுமாம்.

*17. மனம் ஓர் ஆடை :* பக்தனுக்குப் பக்குவப் பட்ட மனம் மிகத்தேவை. மனம், கோயிலாக விளங்க, அதில் இறைவன் எழுந்தருளுகின்றான். இது பழைய கருத்து.

''பக்தன் ஒரு குழந்தை. இந்தக் குழந்தை அணியத்தகுந்த ஆடை - மனம்'' என்பது ஸ்ரீ பகவத் பாதரின் புனைந்துரை; புதுமையான உரை.

''பக்தி ஒரு தாய். இவள் பக்தன் என்ற குழந்தையை வளர்க்கின்றாள். தியானம் என்ற நித்தி யானந்தக் கண்ணீரால் அதைக் களிப்புடன் நீராட்டுகின் றாள். குற்றமற்ற மனம் என்ற ஆடையை அதற்கு உடுத்துகின்றாள். சம்புவே! உனது புராண வரலாறு என்ற அமுதத்தை வாக்கு என்ற சங்கினால் முகுந்து ஊட்டுகின்றாள். அதன் வயிற்றை நிரப்புகின்றாள். உருத்திராக்க மணிகளையும், திருநீற்றையும் புனைந்து, அதற்கு எந்தத்துன்பமும் வாராமல் காப்பாற்றுகின் றாள்.'' (பாடல் 62)

*18. மனம் ஒரு மத்து :* வேதம் ஒரு கடலாம்; அதைக் கடையும் மனமே ஒர மத்தாம். கடைந்தால் முடிவில் கிடைப்பது நித்தியானந்த அமுதமாம். நித்தியானந்தம் பெறுவதற்குரிய ஒரு வழியைக்காட்டு கிறார் ஸ்ரீ பகவத்பாதர்.

''அறிவுடைய சான்றோரர்கள் பலர் திரண்ட னர். பக்தியைக்கயிறாகவும், மனத்தையே மத்தாகவும் கொண்டு வேதக்கடலைக்கடைந்தனர். பாற்கடலைக் கடைந்த போது தோன்றிய - சந்திரன் - இலக்குமி - கற்ப கமரம் - சிந்தாமணி - காமதேனு முதலான பொருள் களுக்குச் சமமான அரிய பொருள்கள் வேதக்கடலைக் கடைந்த போதும் கிடைத்தன. முடிவில் மங்களம் நிறைந்த உண்மையான நித்தியானந்த வானமுதத்தை யும் அவர்கள் பெற்றார்கள்'' (பாடல் 37)

**19. மனம் இரு பாதுகைகள் :** இறைவனது திருவடிகளை எப்போதும் ஏந்திக்கொண்டிருக்கின்ற திருப்பணியைச் செய்கின்றன பாதுகைகள். இவை மகிமையுடையவை.

இராமனது பாதுகைகளின் பெருமைகளை இராமாயணத்தால் அறியலாம்.

கண்ணப்ப நாயனாரது ''பொற்செருப்பு'' இறைவனது திருமேனியைத் தீண்டிய அழகைப் பெரிய புராணத்தால் தெளியலாம்.

இறைவனது திருவடிகளுக்குத்தமது மனத் தையே பாதுகைகளாகச் சூட்டுகின்றார் ஸ்ரீ பகவத் பாதர்.

''சிவனது திருவடிகளைத் தேவர்கள் வணங்கு கின்றனர். அவை கயிலாய மலையில் சஞ்சரிக்கின் றன. அஞ்ஞான இருள் கொஞ்சமும் இல்லாமல் அறவே அழிக்கின்றன. காலனது முகத்திலே உதைக் கின்ற மிகக் கடுமையான தொழிலைச் செய்கின்றன. தாமரை மலர்களைப் போன்ற மிக மென்மையான திருவடிகள் அவை. அவைகளுக்கு எனது மனமே திருப்பாதுகைகள் ஆவதற்கு முழுத்தகுதியை உடை யது. ஏற்றுக்கொள்ளுங்கள்,'' என்று வேண்டுகின் றார். (பாடல் 64)

இறைவனது திருவடிகளும், ஸ்ரீபகவத் பாத ரது மனம் என்ற திருப்பாதுகைகளும் கச்சிதமாகப் பொருந்துகின்றன.

**2. திருவடிகளில் குடியேறும் மனம்**

**1. மனம் ஓர் அன்னப்பறவை :** ஸ்ரீ பகவத் பாதர் மனத்தை அன்னம் முதலிய பறவைகளாக வருணிக்கிறார்.

''மனம் என்ற பறவையே! சிவபெருமானின் பாதங்களாகிய கூட்டில் நீ தாவிச்சென்று விளையாடு வாய். வேறெங்கும் வீணாக அலைய வேண்டாம். உனக்கு மோட்சம் நிச்சயம் கிடைக்கும்'' - (பாடல் 45)

தொடர்ந்து, ''மனம் என்ற அன்னப் பற வையே! சிவபெருமானின் பாதங்கள் என்ற மாடத் தில் தங்கி உன் விருப்பப்படி விளையாடுவாய்.'' (பாடல் 46)

## சிவனார் குணங்கள் எட்டு

''எட்டுக்கொலாம் அவர் ஈறில் பெருங்குணம்'' என்று இயம்புகின்றார் அப்பர் அடிகள்.

**இறைவனின் எட்டு குணங்கள் பின்வருமாறு :**

1. தன்வயத்தன் ஆதல்
2. தூய உடம்பினன் ஆதல்
3. இயற்கை உணர்வினன் ஆதல்
4. முற்றும் உணர்தல்
5. இயல்பாகவே பாசங்களின் நீங்குதல்
6. பேரருள் உடைமை
7. முடிவில் ஆற்றல் உடைமை
8. வரம்பில் இன்பமுடைமை.

*மீண்டும், ''அன்னப்பறவையே! இதுவரை காட்டிலுள்ள அற்பமான நீர்க்குட்டையில் விளையாடி வருத்தமுற்றாய். அந்த வருத்தம் நீங்க வேண்டும். அதற்கு நீ சிவானந்தப் பொய்கையில் மூழ்கி விளையாட வேண்டும். அப்பொய்கையில் தேவர்கள் முனிவர்கள் முதலானோர்களின் மனம் என்ற தாமரைகள் மலர்ந்துள்ளன. பொய்கை நல்ல மணமுடையது. அதில் நிறைந்திருப்பது, நித்தியானந்தத்தைத் தருகின்ற தியானம் என்ற தண்ணீர். அந்தச் சிவானந்தப் பொய்கையில் இனி நீ வாழ வேண்டும்; வளர வேண்டும்'' (பாடல் 48)*

### 2. மனம் ஒரு சாதகப்பறவை - பல பறவைகள்

மனத்தை அன்னப்பறவை என்று வருணித்த ஸ்ரீபகவத்பாதர், அதை ஒரு சாதகப்பறவை என்று புனைந்துரைக்கின்றார்.

சாதகப்பறவை என்பது மழைத்துளிகள் விழும்வரை காத்திருந்து, அவற்றையே பருகி வாழும் பண்புடையது.

*''சிவபெருமானின் திருவடிகள் நீருண்ட மேகங்களாம். அவற்றிலிருந்து விழுகின்ற அருள் மழையை, எப்போதும் பருக வேண்டும் என்ற விருப்பத்துடன் இருக்கின்றது எனது மனம் என்ற சாதகப் பறவை.'' (பாடல் 52)*

இப்படிப்பாடியும் ஸ்ரீபகவத் பாதரது மனம் திருப்தியடையவில்லை. சிறப்பான பறவைகள் அனைத்தையும் போல மனமும் ஓர் ஏக்கத்துடன் இருக்கிறது என்று மற்றொரு பாடலில் பாடுகின்றார்.

*''தாமரைத் தடாகத்தை அன்னப்பறவையும், கருத்த மேகத்தைச் சாதகப்பறவையும், சூரியனைச் சக்கரவாகப்பறவையும், சந்திரனைச்சகோரப் பறவையும் ஆனந்தத்தை நாடி விரும்புகின்றன. அவற்றைப் போல எனது மனமும் உனது திருவடிகளில் நிரந்தரம் தோய்ந்திருக்க விரும்புகின்னறது.'' (பாடல் 59)*


### 3. அடங்கிய மனம்

ஸ்ரீ பகவத் பாதரது மனம், அவருக்கு அடங்கவே இல்லை. அதை அடக்க இறைவனது துணை தேவை. மனத்தை அடக்க இறைவனை வேண்டுகிறார்.

**1. மனம் ஒரு குரங்கு:** மக்கள் ''மனம் ஒரு குரங்கு'' என்று இயல்பாகவே கூறுவது வழக்கம். கிளைக்குக் கிளை தாவும் குரங்கு சற்று நேரமாவது சும்மா இருக்கும். ஆனால், மனக்குரங்கு சும்மா இருக்காது. பற்பல எண்ணங்களைப் பற்றியும், தொற்றியும், விட்டும் இடைவிடாமல் விளையாடும். விரைவில் அடங்காது; கட்டுப்படாது. இதைக் கட்டுப்படுத்த இறைவனிடம் முறையிடுகின்றார் ஸ்ரீ பகவத் பாதர்.

*''சங்கரனே! எனது மனக்குரங்கு எப்போதும் மோகக்காட்டில் திரிகிறது. மக்கள், பொன், வீடு முதலிய ஆசைகள் என்ற பெரிய பெரிய கிளைகளில் மாறிமாறித் தாவிக்கொண்டிருக்கிறது. அதை உனது வசமாக்க வேண்டும்; கட்டி வைத்துத் தெளிவிக்க வேண்டும்'' (பாடல் 20)*

**2. மனம் ஒரு யானை:** மனம் ஒரு குரங்கு மட்டுமன்று, அது மதம் பிடித்த யானையும் ஆகும். அதை அடக்க வல்லவன் ஒருவனே; அவன் சிவனே.



குன்றத்தூரில் தெய்வச் சேக்கிழார் விழா 14.5.99 அன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது. ஆசியுரை வழங்கிய தொண்டை மண்டல ஆதினம் தவத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகளுக்கு வேலூர் இணை ஆணையாளர் திருமிகு ப. ராஜா, பி.எஸ்.சி., பி.எல்., அவர்கள் பொன்னாடை அணிவித்துச் சிறப்பிக்கிறார்கள்.

''சிவன் தனது பேராற்றல் என்ற அங்குசத்தால் அந்த மன யானையை - மதயானையை அடக்க வேண்டும். சிவனை நோக்கிச் செல்கின்ற அன்பினைச் சங்கிலியாகப் பயன்படுத்தி, பிரம்ம ஞானம் என்ற கயிற்றால், திருவடிகளாகிய தூணில் அந்த மன யானையை இணைத்து, பிணைத்து அசையாமல், ஆடாமல் கட்ட வேண்டும்.'' *(பாடல் 96)*

மேலும், ''அந்த மனயானை மிகப் பெரியது; அழகானது. தனது விருப்பப்படி இயங்குவது. அதைப் பக்திப்பாசத்தால் வரிந்து கட்டி, வசமாக்கி, ஆட்கொண்டு மோட்சமளிப்பது சிவபெருமானது பேராற்றலுக்கு உகந்ததேயாகும்'' *(பாடல் 97)*

**3. மனம் ஒரு திருடன் :** ஸ்ரீ பகவத் பாதர் மனத்தை ஒரு திருடன் என்று ஓர் உயர்திணைப் பொருள்களாக உருவகப்படுத்தி உரைப்பது மற்றொரு புதிய கற்பனை.

''ஆற்றல் மிகுந்த திருடர்களுக்கும் அரசனே! எனது மனமும் ஒரு திருடனே. பேராசை காரணமாகப் பிறர் பொருள்க்ளைத் திருட முயல்கிறான் அத்திருடன். அவனை அடக்கி, மடக்கி உன் வசத்தில் வைத்துக் கொள்வாய். அவனது திருட்டுச் செயல்களை என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அவனை அடக்கி, என்னைக்காப்பாற்றுவாய்.'' *(பாடல் 22)*

**4. மனம் ஓர் அடிமை :** ஏ மனமே! நீ சங்கரனுக்கு எப்போதும் சேவை செய்கின்ற அடிமையாக இருக்க வேண்டும்'' *(பாடல் 73)*

★★★

**மனம் நல்ல மனமாக :** சிவானந்த லஹரியில் நூறு பாடல்கள் உள்ளன. இவற்றுள் இருபத்தைந்து பாடல்களுக்கு மேல், மனம் உருவகப் படுத்தப்படுகிறது.

பாடல்களில் அமைந்த ஒவ்வோர் உருவகமும் தனித்தனி கருத்துகளைக் கொண்டன; தனித்தனி சுவைகளை உடையன. மனம் ஒரு மனமாக விளங்க இவை தேவை.

மனம் கொள்ள வேண்டிய நல்லன இவை; தள்ள வேண்டிய தீயன இவை, என்பனவற்றைத் தனிச்சிறப்புடன் விளக்குகின்றார் ஸ்ரீ ஆதிசங்கரர் பகவத் பாதர் அவர்கள்.

# கம்பரின் இராமாவதாரம்

- கம்பக்கலைமணி வே. தியாகராஜன்

### 4. வேள்வி காத்த வேந்தன் மக்கள்

விசுவாமித்திரரின் வேள்வியைக் காக்க அவர் பின்னரே இராமபிரான் செல்லுவதை, தயரதனுடைய உயிரே விசுவாமித்திரன் பின் சென்றது **(மன்னன் இன்னுயிர் வழிக் கொண்டாலென)** போலிருந்தது எனக் குறிப்பிடுவதன் மூலம் இராமபிரானின் பிரிவே தயரதனின் மறைவிற்குக் காரணமாகப் போகிறது என்பதை தொனிப் பொருளாக வைத்தார்.


இராமலட்சுமணர் விசுவாமித்திரர் பின் சென்று ஒரு பாலைவனத்தையடைகின்றனர். வெய்யில் காலம் தவிர, வேறு காலமேயில்லாத அந்த இடம், நினைத்தவர் நெஞ்சு, கண்டவர் கண்கள் கூட வெந்து போய்விடும் படியான கடுமையாயிருந்தது. வெய்யிலின் வெப்பம் தாங்காது நடக்க முடியாது ஓடி வந்த யானையொன்று ஆவென்று வாய் திறந்திருந்த ஒரு மலைப்பாம்பின் வாய்க்குள் நிழல் தேடிச் சென்றது என்றால் பாலைவனத்தின் வெப்பத்தை எப்படி வர்ணிக்கமுடியும்! ஞானிகள் மனம் பற்றில்லாததால் பசையற்றிருக்கும். விலைமாதர் மனமும் எவையும் கண்டு இரக்கமற்று பசையில்லாதிருக்கும். அதுபோல் பசையற்றிருந்தது அப்பாலை வனம் என்கிறார் கவிஞர் பெருமான். இத்தகைய பாலைவனத்தில் தன்னுடன் வந்த 'இளஞ்சிறுவர்களான இராம லட்சுமணரைக் கண்டு ''இவர்கள் பலசாலிகளான போதிலும் மலர் போன்ற திருமேனியுடையவர்'' **(அளவிலாற்றலைப் பொருந்தினராயினும் பூவின் மெல்லியர்)** என, பசி, தாகம் களைப்பிலிருந்து நீங்கக் கூடிய பலா, அதிபலா என்ற இருமந்திரங்களைக் கூற, அவர்கள் அதனைக் கூறி, களைப்பு நீங்கினர். பலா அதிபலா என்ற மந்திரங்கள் சாவித்ரி உபநிஷதத்தில் காயத்ரியை அதிதேவதையாகக் கொண்டவை என்பர். வேதவித்துக்களான பெரியோர்கள் அதனாலேயே காயத்திரி மந்திரத்தை செபம் செய்வர். உலகத்தின் குருவாக விளங்கும் இராமபிரானிடம் அம்மந்திரங்களை விசுவாமித்திரர் உபதேசமாக அளித்து விட்டார்.

பசி, தாகம், களைப்பு நீங்கிய இராமபிரான் ''தருமமே உருவான அடியேனின் தந்தையின் நாட்டில் இப்படி ஒரு இடமா?'' எனக்கேட்க, விசுவாமித்திரர் ''இந்தப் பாலைவனத்திற்கு ஒரு ராணி. அவள் கையில் வைத்திருக்கும் 'சூலாயுதத்தில் உயிரோடு ஒரு பாம்பு சுற்றிக் கொண்டிருக்கும்' என்று ஏதோ கூற வந்தவர் இராமபிரானின் பேரழகைக் கண்டு, தன்னையறியாமலே ஆண் மகனே பார்த்து ஆசை கொள்ளும் அழகிய தோள்களையுடையவனே! **''ஆடவர் பெண்மையை அவாவும் தோளினாய்!''** என அழைத்து ''அவ்வரக்கியின் பெயர் தாடகை'' என்றார். முற்றும் துறந்த முனிவரது மனத்தையும் மயக்கி விட்டது இராமபிரானின் பேரழகு என்பது குறிப்பு. பும்ஸாம் **மோகன ரூபாய!** ஆண்மக்களின் மனத்தையும் மயக்கும் அழகனே! என வடமொழியினரும், ''மன்மதன் இராமபிரானது அழகைக் கண்டு தான் ஒரு பெண்ணாக வந்து இராமபிரானை அடைய விரும்புவான்'' **(மன்மதனும் மடவாராக ஆதரம் செய்குவான்)** என திவ்யகவி பிள்ளைப் பெருமாள் ஐயங்காரும் கூறிப் போந்தனர். ''இலங்கையிலுள்ள அரசன் கட்டளையால் மலைபோன்ற பலத்துடன் இவ்வுலகத்திலுள்ள எல்லா உயிர்களையும் எம் போன்றவருடைய வேள்விகளையும் அழித்துவருகிறாள். உலகத்தில் படைக்கப்பட்ட யாவும் தன் உணவிற்காக படைக்கப்பட்டன என எண்ணுகிறாள், மகனே! ''விசுவாமித்திரருடன் இராமலட்சுமணரை அனுப்பும்போது தசரதன் **தந்தை நீ தனித்தாயும் நீ இவர்க்கு!''** என்றான். அதை ஏற்பதுபோல் இம் முனிவர் இராமபிரானை **''மைந்த''** என விளித்து, ''உலகையே இனி வயிற்றுக்குள் அடக்கிவிடுவாள் போலும்!'' என்றார்.

எழுத்தறிவித்தவன் இறைவனாகும் என்பது நீதி நூல். எனவே இராம பிரானுடன் பேசிய முனிவரைக் கம்பன் **இறைவன்** எனக் குறிக்கிறார். பலா அதிபலா மந்திரோபதேசம் செய்த இறைவனன்றோ! தாடகையைப் பற்றி முனிவர் கூறியதைக் கேட்ட இராமபிரான் தன் தலையை ஆட்டிக் கோபத்துடன் ''அவள் எங்கிருக்கிறாள்'' எனக் கேட்கிறார். சங்கை வைத்துக் கொள்ளும் கையில் வில்லை எடுத்தாலும் கடவுள் கடவுள் தானே என்பது கம்பன் கருத்து.

அங்கிறைவன் அப்பரிசுரைப்ப அது கேளா
கொங்குறை நறைக் குல மலர்ச் சென்னி குலுக்கா
எங்குறைவது இத்தொழில் இயற்றுபவள் என்றான்
சங்குறை கரத்தொரு தனிச்சிலை தரித்தான்.

''அவள் இங்குதான் இருக்கிறாள்'' என மாமுனிவர் விடையளிக்கும்போதே தாடகை தோன்றினாள். அவள் கண்களுக்கு இராமலட்சுமணர் இருவரும் ஏதோ சிறு வாழைக்கனிப் போல் தோன்றினர் போலும்!'' என் காவலை யாரும் கடந்து வரமுடியாது. வந்தால் உயிருடனிருக்க முடியாது. இங்கு யாவற்றையும் அழித்த எனக்கு இனி உண்ண



தெய்வச்சேக்கிழார் விழா கருத்தரங்கில் கம்பன் கவிநயமணி வே. தியாகராசன், முனைவர் த. அமிர்தலிங்கம்

உணவு கிடையாது என எனக்கு உணவாவதற்காக வந்தீர்களா? அல்லது விதி உங்களை என்னை நோக்கித் தள்ள, வந்தீர்களா?'' என இடிபோல் முழங்கி எதிரிலிருந்த மலைகளைப் பந்துபோல் உருட்டினாள். மேகங்களை கோபத்துடன் நோக்கி, அவை நீராக வரச் செய்தாள். இராம பிரான் அவளது சாகசங்களைக் கண்டு அஞ்சவில்லை. ''முதல் முதலில் வில்லை எடுத்து ஒரு பெண்ணையா கொல்லுவது?'' என உண்மையான கருணையுடன் மனதார நினைத்தான் பெரிய மனிதனான இராமபிரான். **பெண்ணென மனத்திடை பெருந்தகை நினைந்தான்''** என்கிறது கம்பனின் மந்திரக்கவிதை. ''உலகில் எல்லாவிதமான கொலைகளையும் செய்து எம்போன்ற முனிவர்களின் உடலில் தோலும் நரம்புதான் இருக்கும், உண்பதற்குச் சதையில்லை எனவிட்டிருக்கிறாள். இராம! இவளைப் பெண் என்றா எண்ணுகிறாய்! இவருக்கு ஆயுள் முடிந்து விட்டது. எனவே தன் உலகிற்கு அழைத்துச் செல்லலாம் என நன்கு ஆய்ந்து உயிர்களைக் கவர்வதால் யமனை **யமதருமராஜன் என்பர்**. இவள் மனித வாடை வீசுகின்றது எனக் காதில் பட்டால் உண்டுவிட வேண்டுமென்ற எண்ணமுடையவள். **நாற்றங் கேட்டலும் தின்ன நயப்பதோர் கூற்றுண்டோ?** தருமத்தை நன்கு அறிந்து கூறுகிறேன். இவள் சீறி நிற்பது கண்டு அஞ்சிப் பேசவில்லை. நீ அமைதியாக இவ்வாறு நிற்பது அறமன்று. அரக்கியைக் கொல்வாயாக!'' எனக் கூறினார் விசுவாமித்திரர். **''அரக்கியைக் கோறி என்று எதிர் அந்தணன் கூறினான்.** எவ்வுயிருக்கும் நன்மைபயக்கும் காரியத்தைச் செய்யத்தூண்டியதால்,

> அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
> செந்தண்மை பூண்டு ஒழுகலான்

என்ற வள்ளுவரின் வாக்குப்படி விசுவாமித்திரரை ''அந்தணர்'' எனக் குறித்தார். ''அறத்திற்கு புறம்பான செயலாயினும், அது செய்யத்தான் வேண்டும் எனத் தாங்கள் கட்டளையிட்டால், அதை வேதவாக்காக எண்ணி அதன்படி நடப்பது என் கடமை'' எனப் பதிலிறுத்து, தாடகையை அழிக்கத் தயாரான போது, திடீரெனத் தாடகை இராமபிரான் மீது தன் வேலாயுதத்தை விட்டுவிட்டாள். இராமபிரான் அதைத் துண்டு துண்டாகுமாறு செய்தனர். பிறகு தாடகை கற்களை விட்டெறியலானாள். இராமபிரான் அவற்றை அம்புமாரியால் தடுத்தான் **வில்லின் மாரியின் வீரன் விலக்கினான்** என்கிறார் கம்பர். ஒலியின் வேகம் **(Velocity of the Sound)** எனத் தற்கால விஞ்ஞானி கூறுவது போல வேகமான அம்பொன்றை இராமபிரான் ஏவ, அது அவள் மார்பைப் பிளந்து ஊடுருவிச் சென்றது. நல்லவர்கள் கூறும் நன்மொழிகள் பொல்லாதவரின் மூளையில் நிற்காது ஒரு காது வழி சென்று மற்றொரு காது வழியாக வருவது போல் இராமபாணம் சென்றது. **கல்லாப் புல்லார்க்கு நல்லோர் சொன்ன பொருளெனப் போயிற்றன்றே.** அரக்கரின் குருதிச் சுவையை விரும்பி வேண்டிய கூற்றுவன் அதன் சுவையை அறிந்தான். இந்த ரத்த வெறி இராவணனது ரத்தத்தைச் சுவைக்கும் வரை இருக்கும் என்பது குறிப்பு.

தேவர்கள் மகிழ்ச்சியால் மலர் மாரி பொழிந்தனர். தாடகையைக் கொன்ற வீரம் கண்டு மகிழ்ந்து, விசுவாமித்திரர் இராமபிரானுக்கும் இலக்குவனுக்கும் குறிதவறாது அம்புகள் விடும் கலையைக் கற்பித்தார். சடையப்ப வள்ளல் என்ற பெரியவர் கம்பனை ஆதரித்தார். கவிஞர்கள் தங்களை ஆதரித்தவர்களைத் தமது காவியத்தில் வைத்துச் சிறப்பித்துப் பாடுவதுண்டு. புகழேந்தி சந்திரன் சுவர்க்கி என்பவரையும், சேக்கிழார் பெருமான் அநபாய சோழனையும் முறையே நளவெண்பாவிலும் திருத்தொண்டர் புராணத்திலும் வைத்துப்பாடியதே சான்றுகளாகும். கம்பன் தனது காவியத்தில் நூறுபாடல்களுக்கு ஒரு முறை சடையப்ப வள்ளலைப் புகழ்ந்து பாடியதாகவும், அதுகண்ட ஒரு பெரியவர் ''எதற்காக இவ்வளவு அதிகமாகப்பாட வேண்டும்? ஆயிரம் பாடல்களுக்கு ஒரு பாடல் போதாதா?'' எனக் கேட்க, கம்பன் ''நூற்றிலொருவர் சடையப்பன் மாதிரி கொடை வள்ளல்களாக இருப்பர் என எண்ணினேன். தாங்கள்

ஆயிரத்தில் ஒருவர் தான் அத்தகைய வள்ளலாக இருக்க முடியும் எனக் கூறுவதாகத் தோன்றுகிறது. அப்படியே இருக்கட்டும்'' என நூற்றுக்கொரு முறை பாடிய பாடல்களை நீக்கி ஆயிரத்தில் ஒன்றாக அமைத்தார் கவிச்சக்கரவர்த்தி என்ற வரலாறு உண்டு. அத்தகைய பாடலில் முதல் பாடல் இது. ''வைத்தியர் தவறான மருந்தைக் கொடுக்கலாம். ஆனால் மருந்து ஒரு நாளும் தன் கடமையில் தவறாது. எனவே சடையப்பன் என்றைக்காவது ''கொடுக்கிறேன்'' என்று ஒரு வறுமையாளனிடம் கூறினால் அது தவறாது.

''மண்ணவர் வறுமை நோய்க்கு மருந்தெனச்
சடையன் வெண்ணை
அண்ணல் தன் சொல்லேயன்ன'' குறிதவறாத படைக்கலங்களையருளினார் விசுவாமித்திரர் என்பது குறிப்பு.

இதன் பின்னர் விசுவாமித்திரருடன் இராம லட்சுமணர் அவர் வேள்வி செய்யும் இடம் நோக்கிச் செல்கின்றனர். வழியில் ஒரு அழகிய சோலையை அவர்களுக்குக் காட்டிய விசுவாமித்திரர் ''தன் கணவனைத் தவிர வேறு தெய்வம் கிடையாது என எண்ணும் பெண்ணின் இதயம் போன்ற புனிதமான சோலை'' **தங்கள் நாயகரில் தெய்வம் பிறிதில்லை என்று எண்ணும் மங்கைமார் சிந்தை போலத் தூயது** எனப் பெண்மக்களின் கற்பின் மேன்மை கூறி ''இவ்விடம் திருமாலே தங்கித் தவஞ்செய்யும் பேறு பெற்ற இடம்'' எனக் கூறி **திருமாலின் வாமனாவதாரம் பற்றிய வரலாறு கூறினார்.** ஒவ்வொரு வருடமும் வாமனராக இறைவன் அவதரித்த நன்னாளை நம்மவர் கொண்டாடுவது வழக்கம். அத்தகைய நன்னாளில் வாமனாவதாரம் பற்றி அன்பர்கட்குத் தனிக்கட்டுரை மூலம் அப்பெருமையைக் கூறுவோம்.

★★★

விசுவாமித்திரரின் வேள்வியை இராம லட்சுமணர் ***''கண்ணினைக் காக்கின்ற இமையிற் காத்தனர்''*** என்ற சொற்றொடருக்கு ''இராமபிரான் இலக்குவனை வேள்விச் சாலையில் நிறுத்தி, தான் மட்டும் வேள்விச்சாலையைச் சுற்றிச் சுற்றி வந்து, தம்பியை அடிக்கடி தட்டி ஜாக்கிரதையாக இருக்குமாறு எச்சரித்துக் கொண்டே சென்றார்'' எனக் கூறி ''மேல் இமை இராமன், கீழிமை இலக்குவன். கண் விழியாகசாலை. மேலிமை கீழிமையைத் தட்டும். கீழ் இமை மேலிமையை தட்டாது என்றெல்லாம் பொருள் கூறி **அண்ணனுக்கு எட்டும் தம்பிக்கு எட்டாது** என ஒரு பழமொழியையே உண்டாக்கி விட்டனர். இது கேட்க அழகாக உள்ளது. கம்பனை நாம் மிக விழிப்போடு படிக்க வேண்டும். அடுத்த பாடலிலேயே ***''காத்தனர் திரிகின்ற காளை வீரா''*** என அடுத்த வரியிலேயே இருவரும் சுற்றி வந்ததாகக் கூறுகிறார் கவிஞர். கண்ணை இமைகள் காப்பதுபோல் கவனமாகக் காத்தனர் என்ற சாதாரணப் பொருளே பொருந்தும்: யாகசாலையை நோக்கி வந்த அரக்கர்களின் கூட்டத்தை இராமபிரான் இலக்குவனுக்குக் காட்ட, இலக்குவன் முதல் முதலில் அரக்கர்களின் மீது அம்பு ஏவி அவர்களை அழிக்கலானார். **இருந்தும் கெடுத்தார் இறந்தும் கெடுத்தார்** என்றபடி இறந்து போன அரக்கர்களின் உடல்களும் ரத்தமும் வேள்வித் தீயில் விழுந்தால் அதனாலும் வேள்வி தடைபடலாமல்லவா? இராமபிரான் வந்த காரியமே வேள்வியைக் காக்கத்தானே! அதனால் அரக்கர்களுடைய இரத்த மாமிசங்கள் வேள்விச் சாலையில் விழாத வண்ணம் தன் அம்புகளால் யாகசாலையை மறைத்து, ஒருமறைவான கூடம் போலாக்கி விட்டார் என்கிறது கவிஞனின் வாக்கு.

தூமவேல் அரக்கர் தம் நிணமும் சோரியும்
ஓமவெங்கனலிடை உகும் என்று எண்ணித்
தாமரைக் கண்ணனும் சரங்களே கொடு அக்
கோமுனி இருக்கையை ஓர் கூடமாக்கினான்

என்கிறது கவிதை. இதன் பின்னர் இராமபிரான் அரக்கர்களைத் தனது வில்லாலும் அழித்தார். அரக்கர்கள் தலைகள் மலைபோலக் குவிந்தன. தாடகையின் மக்களான சுபாகு, மாரீசன் இருவரும் அங்கு தோன்ற சுபாகுவைக் கொன்று மாரீசனைக் கடலில் தள்ளியது இராமபிரானின் அம்பு.

திருமகள் நாயகன் தெய்வ வாளிதான்
வெருவருதாடகை பயந்த வீரர்கள்
இருவரில் ஒருவனைக் கடலில் இட்டது: மற்றங்கு
ஒருவனை அந்த அகப்புரத்தின் உய்த்ததே.

மாரீசன் பின்னர் மாயமானாக வரப்போகிறான் என உணர்ந்த தெய்வீக ராமன் அவனைக் கடலில் தள்ளினார் என்கிறார்கள் சிலர். அதுவல்ல, தாடகையின் மூத்த மகன் மாரீசன் பெற்ற தாய்க்குக் கடமை செய்ய வேண்டியவன். அத்தகைய ஈமக்கடனைச் செய்யட்டும் என்றே அவனைக் கொல்லவில்லை என்பர் பெரியோர். (மகாமாயாவிகளான மகோதரன் (இராவணனின் மந்திரி) அல்லது இந்திரசித் இவர்கள் கூட மாயமானாக வரலாம். எனவே பின் உபயோகம் கருதி அவனை இராமபிரான் கடலில் தள்ளினார் எனக்கருத வேண்டுவதில்லை) எவரானாலும் அவரவர் கடமை முடியும் வரை தெய்வங்கள் அவர்களை அழித்ததில்லை.

இவ்வாறு அரக்கர்களை அழித்து விசுவாமித்திரனின் வேள்வியைக் காத்த் இராமபிரான் வெற்றித் திருமகளைப் பெற்ற இராமபிரான் திருமகளான சீதாபிராட்டியையும் திருமணம் செய்து கொள்ளப் போகிறான் என்பதையே **திருமகள் நாயகன்** என்ற மேற்கண்ட கவியில் சூசனையாகக் கட்டி விட்டார் கவிச்சக்கரவர்த்தி கம்பர்.

**- ஜெய் சீதாராம்.**

# ஞேயத்தே நிற்றல்

- டி.என்.எஸ். முருகதாஸ் தீர்த்தபதி, சிங்கம்பட்டி

ஞேய்த்தே நின்றோர்க்கு ஞானாதி நின்றிடும்
ஞேயத்தின் ஞாதுரு ஞேயத்தில் வீடாகும்
ஞேயத்தின் ஞேயத்தை ஞேயத்தை யுற்றவர்
ஆயத்தில் நின்ற அறிவறி வாரே''

- திருமந்திரம் 1580

இத்திருமந்திரப்பாடலின் விளக்கம் பின்வருமாறு.

''ஞேயம், அறியப்படு பொருளாகிய சிவானந்தம், அதில் நிலை பெறுதலாவது வெயிலொளியில் அடங்கிய விளக்கின் ஒளிபோல உயிர் தானற்று ஆனந்தமே வடிவாய் நிற்றல், அங்ஙனம் நின்றார் எய்தும் பயனாவன ஞானமும் அதன் பயனாகிய சிவானுபவமும் ஆகும்.

''ஞானாதி: ஞானத்தில் ஞானமும், ஞானத்தில் யோகமும், ஞானத்தில் கிரியையும், ஞானத்தில் கிரியையுமாகிய இவைகளாம். ஞானாதி - ஞானத்தை ஆதியாக உடைய இவைகள் என்க, இந்நான்கும் நிலைபெறின் **எல்லாம் சிவன் செயலாவதன்றிச் சீவன் செயலாகாமை தெளிக**''.

1. சரியை - சரியையில் சரியை, சரியையில் கிரியை, சரியையில் யோகம் மற்றும் சரியையில் ஞானம்.
2. கிரியை - கிரியையில் சரியை, கிரியையில் கிரியை, கிரியையில் யோகம் மற்றும் கிரியையில் ஞானம்.
3. யோகம் - யோகத்தில் சரியை, யோகத்தில் கிரியை, யோகத்தில் யோகம் மற்றும் யோகத்தில் ஞானம்.
4. ஞானம் - ஞானத்தில் சரியை, ஞானத்தில் கிரியை, ஞானத்தில் யோகம் மற்றும் ஞானத்தில் ஞானம்.

முக்தி பேற்றை அடைய இந்நான்கினுள் நான்கையும் அடக்கிப் பிரித்து பதினாறு படிகள் என்று நம் சமய தத்துவங்கள் கூறுகின்றன.

ஞானத்தில் ஞானம் என்ற நிலையில் ஜீவன் எல்லாமே சிவன் செயல் என்ற நிலையில் நிற்கும். இந்நிலையில் நிற்கும் ஜீவனுக்கு செய்வினை பற்றாது என்று இத்திருமந்திரம் சுட்டுகின்றது.

பகவத் கீதையில் கிருஷ்ண பரமாத்மா அர்ச்சுனனிடம் ''எதிர் வரிசையில் நிற்கும் படையினரை, குரு மற்றும் உறவினர் என்று கொள்ளாதே. கலக்கம் இன்றி போர் செய்'' என்று கூறிவிட்டார். ''இதனால் உனக்கு வினை கிடையாது எல்லாமே என்னையே சாரும்'' என்று கூறினார். இந்த உபதேசம் யாருக்குச் சொல்லப்பட்டது என்று நாம் சிந்திக்க வேண்டியது அவசியமாகிறது. இது சாதாரண நிலையில் உள்ள ஜீவர்களுக்கு கூறப்பட்டதாக கொள்வதற்கில்லை. அமானுஷ்யமான, சிவபெருமானை நேரில் கண்டு, அவரோடு தோளோடு தோள் உரசிப் போரிட்டு பாசுபதாஸ்திரம் பெற்ற அர்ஜுனனுக்கு கூறப் பட்டது.

ஊழ் வினை உறுத்து வந்து ஊட்டும்'' என்று ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரம் கூறியிருப்பதற்கு மாறாக அர்ஜுனனுக்கு வினை கிடையாது எல்லாம் என்னையே சாரும் என்று பரமாத்மா கூறிவிட்டாரே என்று சைவசித்தாந்திகள் கீதையைப் புறக்கணித்துவிட்டார்கள். இது தீர்மானமாக ஏகன்மவாதிகளின் கூற்று என்று முடிவிற்கு வந்துவிட்டார்கள். ''உண்மை விளக்கத்திற்கு'' இலக்கண வாயிலாக நாம் கொள்ள வேண்டிய ''வழி'' நூல் அல்லது ''விரிவு'' நூல் என்ற அடிப்படையில் திருதேமொழியார் அவர்கள் எழுதிய நூல் பக்கம் 333ல் ஆதிசங்கரர் அத்வைத கொள்கையை ஏகான்ம வாதம் என்ற அடிப்படையில் அவர் போதிக்கவில்லை என்று அறுதியிட்டு கூறுகிறார். எல்லாமே ஆண்டவன் செயல் என்று நாம் உலக வாழ்க்கையை மேற் கொள்ள முடியாது. எல்லாமே ஆண்டவன் செயல், எனக்கு வினை கிடையாது என்று கீதையில் கூறியிருப்பதாகக் கூறி ஒரு பெண்ணின் கற்பை நாம் சூறையாடினாலோ, அல்லது ஒரு வங்கியை கொள்ளையடித்தாலோ, அல்லது ஒருவனைக் கொலை செய்தாலோ, அரசு நம்மை சும்மாவிடாது என்பது உறுதி. நீதி மன்றத்தில் இதுபோல் கூறினால் நம் பிடரியில் இரண்டு ஓங்கிக் கொடுத்துச் சிறையுள் அடைக்கப்படுவோம் என்பதில் ஐயம் இல்லை.

ஆகவே கீதையில் கூறி இருப்பதற்கு விளக்கம் என்னவென்று ஆய்வு செய்ய வேண்டியது அவசியமாகிறது. மறைந்த எனது ஞானகுருவான ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய ஸ்வாமிகளான மதுரை ஆதீனம் அவர்கள் பகவத் கீதைக்கு சகலாகமப் பண்டிதரான அருள்நந்தி சிவாச்சாரியார் சைவ சித்தாந்த பாரியமாக உரை எழுதியிருந்ததைக் கூட சித்தாந்திகள் ஏற்க மறுத்துவிட்டார்கள் என்று பல முறை கூறக் கேட்டிருக்கிறேன்.

அரக்கன் ஒருவன் பல ஆண்டுகள் கடும் தவம் புரிந்தான். அவனது தவத்தை ஏற்று அவன் முன்னால் நான்முகன் தோன்றினார். உனக்கு வேண்டிய வரங்களைக் கேள் என்றார். அரக்கன் சாதுர்யமாக எனக்கு ஆயிரம் கவசங்கள் வேண்டும் என்றும் மற்றும் என்னோடு யாராவது போர் புரிந்து ஒரு கவசத்தை பிளந்து விட்டால் அதனைப் பிளந்தவன் மாள வேண்டும்

என்றும் பிரார்த்தித்து வேண்டினான். வரத்தை கொடுத்து விட்டு நான்முகன் மறைந்தார். அரக்கன் ஆர்பபரித்து எழுந்தான். அவனது அட்டகாசத்திற்கும் அட்டூழியத் திற்கும் அளவே இல்லை. அண்டங்களும் ஆகாசமும் கலங்கின. வானோர்கள் திசை தெரியாமல் ஓடினார்கள். பின்னர் எல்லோரும் ஒருவாறாக ஒன்று கூடி பிரம்மனிடம் முறையிட்டார்கள். அவர் ''நான் கொடுத்த வரத்தை திரும்பப் பெறுவது முறையாகாது, ஆகவே நீங்கள் வைகுண்டம் சென்று மஹாவிஷ்ணு விடம் முறையிடுங்கள், அவர் உங்களது துன்பங் களை துடைத்து அருளுவார்'' என்று கூறினார்.

தேவர்கள் மீண்டும் ஒன்று கூடி வைகுண்டம் சென்று வைகுண்டநாதனை தெரிசித்து முறையே தங்களுடைய கஷ்ட நஷ்டங்களைச் சொல்லி விண் ணப்பித்தார்கள். அவர் நீங்கள் கவலையை விடுங்கள் நான் அவைகளுக்குத் தீர்வு காணுகிறேன் என்று கூறி தேவர்களை ஆசுவாசப்படுத்தி அனுப்பி வைத்தார்.

மஹாவிஷ்ணு தன்னை இரண்டு வடிவமாகப் பிரித்துக் கொண்டார். ஒன்று நாராயணர், மற்றொன்று நரன். நரனை தபசுக்கு அனுப்பிவிட்டு நாராயணர் சகசரகவசனுடன் ஆயிரம் ஆண்டு போரிட்டு ஒரு கவசத்தை பிளந்துவிட்டு மாண்டார். நரன் தபசு முடித்து வந்து நாராயணரை உயிர்ப்பித்து எழுப்பி தபசுக்கு அனுப்பிவிட்டு சகசரகவசனுடன் ஆயிரம் ஆண்டுகள் போரிட்டு ஒரு கவசத்தைப் பிளந்து மாண்டான். இதுபோன்று நரனும் நாராயணரும் மாறி மாறி இறந்தும் உயிர்ப்பித்தெழுந்தும் சகசரகவசனுடைய 999 கவசத்தைப் பிளந்து எரித் தார்கள். எஞ்சிய ஒரு கவசம் இருக்கையில் இனி நிச்சயம் நாம் மரணம் அடைவோம் என்ற நிலை வந்ததும் போர்க்களத்தைவிட்டு ஓடி மறைந்து சூரிய பகவானிடம் சென்று தஞ்சம் புகுந்தான் சகசரக்கவசன். இந்நிலையில் குந்திதேவி அறியாப்பருவத்தில் துருவாச முனிவர் சொல்லி வைத்த மந்திரத்தை விளையாட்டாக பிரயோகித்ததில் சூர்யபகவான் குந்திதேவியின் வயிற்றில் சகசரக்கவசனை விட்டு விட்டு மறைந்தார். அவனே மஹாபாரதக் கர்ணன். இறுதிக் கட்டத் தில் கர்ணனிடமிருந்த எஞ்சிய கவசக் குண்டலங்களை கிருஷ்ண பரமாத்மாவின் சூழ்ச்சி யால் இந்திரன் அபகரித்துச் சென்றான் என்பது எல் லோரும் அறிந்ததே. கர்ணனுடைய மறு அவதாரம் சிறுத்தொண்ட நாயனார் என்பது ஆன்மீக அறிஞர் களின் கருத்து.

மஹாபாரதக் காலத்தில் முறையாக நர நாராயணர்கள் அர்ஜுனனாகவும் கிருஷ்ணபரமாத்மா வாகவும் அவதரித்தார்கள். கீதாசாரம் என்பது ஒரே தெய்வம் இரு அவதாரமாக இருந்த நிலையில் ஒன்று மற்றொன்றுக்கு உபதேசித்தது. ''ஞானத்தில் ஞானம்'' என்ற பாதத்தில் நின்ற உயிருக்கு எப்படி செயலால் வினை அணுகாதோ அதுபோல் அர்ஜுனனின் செய லினால் அவனை வினை அணுகவில்லை. வேதாந்த சித்தாந்த சமரசம் செய்வித்த தாயுமான ஸ்வாமிகள் கூட ''பன்முகச் சமய நெறி படைத்தவரும் யாங்களே கடவுளென்றிடும் பாதகத்தவரும்'' என்று ஏகான்ம வாதத்தை சாடுவதைக் காணலாம். ஆகவே இது ஏகான்மவாதிகளின் கூற்று என்று கொள்ளாமல் கீதையை சித்தாந்த விளைவிற்கு எடுத்துக் கொள்ளா விடினும் அதனை சித்தாந்திகள் புறக்கணிப்பது அவசியமில்லை என்பது என் தாழ்மையான அபிப் பிராயம் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*(உண்மையில் நடந்த ஒரு உவமானக் கதை)*

திபெத்தில் அதிகாலை வேளையில் வயது முதிர்ந்த மதகுருவில் ஒருவரான லாமா அமர்ந் திருந்தார். வழக்கமாக அவ்வேளையில் தண்ணீர் எடுக்கச் செல்லும் இளம் பெண்கள் கூட்டம் ஒன்று மண்டபத்தின் பாதை வழியே சென்று விட்டது. பத்து மணித் துளிகள் கழித்து அக்கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாது சற்று தாமதித்து ஒரு இளம் பெண் விரைவாகச் சென்று தோழிகளுடன் சேர்ந்து கொள் ளப்போனாள். எதிர்பாராதவிதமாக அந்த வயோதிக லாமா தனி வழிச் சென்ற அப்பெண்ணை வலுக்கட் டாயப்படுத்தி உடல் உறவு கொள்ள நினைத்தார். அப்பெண் அவரிடமிருந்து திமிறி, அவரைத் தள்ளி விட்டு ஓடி தாய் தந்தையரிடம் குய்யோ முறையோ என்று அழுது நிகழ்ந்ததைக் கூறினாள். அவர்கள் சற்று நேரத்தில் ஊரையே கூட்டி நீதி வழங்க வேண்டு மென்று பிரார்த்தித்தார்கள். நீண்ட நேர விவாதத் திற்குப் பின் வயது முதிர்ந்த சில பெரியவர்கள் இதில் ஏதோ மர்மம் இருக்கிறது, ஏன் என்றால் குற்றம் சாட்டப்பட்ட மதகுரு சாதாரணப்பட்டவர் அல்ல, அவர் கடந்த எழுபது ஆண்டுகள் நம்மிடையே நேர்மையுடனும் ஒழுக்கத்துடனும் வாழ்ந்த ஞானி. ஆகவே இந்தப் பெண்ணை அவரிடமே சமாதானம் செய்து விட்டு விட்டுவாருங்கள், பின் விளைவுகளைப் பார்த்துக் கொள்வோம் என்று முடிவு செய்தனர். அதன்படியே அப்பெண்ணை அழைத்து லாமாவிடம் சென்றனர். அவர் புன்முறுவலுடன் எல்லோரையும் வரவேற்று என்ன விபரம் என்று கேட்டார். ஊர் பெரியவர்களும் காலையில் நடந்ததை நினைவு படுத்தி இந்தப் பெண்ணை தங்கள் விருப்பப்படி நடந்து கொள்ள அழைத்து வந்திருக்கிறோம் என்றனர். அவர் சிரித்துக் கொண்டே சொன்னார், ''நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கும்'' என்று சொல் வார்கள். இந்தப் பெண்ணை காலையில் சந்திக்கும் வேளையில் ஒரு பெரிய மஹான் ஒரு சிறு பிழைக்காக கழுதை வயிற்றில் பிறக்க இருந்தார். என்னுடைய தவ வலிமையால் அவருக்கு மனித வடிவு கொடுக்க முயற்சித்தேன். பலிக்கவில்லை என்று சொல்லி சோர்ந்துபோனார். அவர் கழுதை வயிற்றில் புகுந்து விட்டார். இனி நாம் என்ன செய்வதற்கு இருக்கிறது? நமக்கு மேல் ஒரு சக்தி இயங்குவதை நாம் எல்லோரும் உணர வேண்டும் என்றார். ஆகவே இதுபோன்று ஞேயத்தில் ஞேயம் நிற்கும் ஞானிகளை வினையும் சாருமோ? எனில் சாராது என்பதே மெய்ம்மையாகும்.

# ஆடி அமாவாசை நோன்பு

- திருமதி மீனாட்சி கோகுலவாசன்

'அழகாபுரி' என்னும் பட்டினத்தை அளகேஸ்வரன் என்னும் அரசன் ஆண்டு வந்தான். அவனுக்கு ஒரே புதல்வன்; அவனுக்கோ ஆயுள் இல்லை; அல்ப ஆயுள் உள்ளவன். அரசனுக்கோ வயதாகி விட்டது. அந்தப் புத்திரனும் தேசாந்திரம் போவதாகச் சொல்லிப் புறப்பட்டான். போகும் வழியில் பாம்பு கடித்து இறந்து விட்டான். இதையறிந்த பெற்றோர்கள் அவனை எடுத்துவந்து போட்டுக்கொண்டு மிகவும் வருத்தப்பட்டார்கள். பிரம்மச்சாரியாக இறந்தால், அவனுக்கு ஜன்ம ஜன்மத்திற்குப் பாவம் நிவர்த்தியில்லை என்றும், அவ்னுக்கு ஏதோ ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்தவைத்து செய்ய வேண்டிய பிற சடங்குகளையும் செய்தால்தான் அவனுக்குப் பாவ நிவர்த்தி உண்டாகும் என்றும் நீதிநூல்கள் கூறுகின்றன. அப்படி இருப்பதால் அந்தப் பிணத்தை எடுத்து ஒரு வண்டியில் போட்டுக் கொண்டு, ஒரு மூட்டை நிறைய நகை நட்டுகளுடனும் பணத்துடனும், பெற்றவர்கள், ''இந்தப் பையனுக்கு யாராவது பெண் கொடுக்கிறீர்களா?'' என்று கேட்டுக் கொண்டு தெருத் தெருவாகச் சென்றார்கள்.

போகும் வழியில் 'மதுராபுரி' என்னும் பட்டணம் இருந்தது. அந்த ஊர் அரசனுக்கு முதல் தாரத்துக்கு ஒரு பெண், அவள் தாயை இழந்தவள். இரண்டாவது தாரம் மிகவும் கொடுமைக்காரி. அவளுக்கு ஒரு பெண், அரசனின் இரண்டாவது மனைவி முதல் தாரத்துப் பெண்ணை எவ்வளவு கொடுமை படுத்த முடியுமோ அவ்வளவு கொடுமை படுத்தினாள். அந்தப் பெண் நமக்கு எப்பொழுது விடிவு மோட்சம் கிடைக்குமோ என்று கவலையுடன் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருந்தாள். அப்படி இருக்கும்போது இறந்த மகளை வண்டியில் போட்டுக் கொண்டு அழகாபுரி அரசன் அவ்வழியே வந்தான். மதுராபுரி அரசனின் அரண்மனைப் பக்கமாக வண்டி வந்தது. விஷயங்களை அறிந்த கொடுமைக்காரியான இளைய தாயார் உடனே, ''என் மூத்தாள் மகள் இருக்கிறாள்; நான் தருகிறேன்; என்று சொல்லி, உடனே உள்ளே இருந்த பெண்ணை இழுத்துவந்து, வண்டியில் தள்ளி ஏற்றிவிட்டு அந்த வண்டியிலிருக்கும் நகை மூட்டைகளையும், பண மூட்டைகளையும் எடுத்துக் கொண்டு அனுப்பிவிட்டாள். அந்தப் பெண்ணும் விட்டால் போதும் என்று கிளம்பிவிட்டாள். மயானத்தில் வந்து அவளுக்குச் செய்யவேண்டியவைகளை எல்லாம் செய்து தாலியைக் கொடுத்து கல்யாணம் செய்கிறார்கள்! பிறகு பிணத்துக்குச் செய்ய வேண்டியவைகளை எல்லாம் செய்து அவளுக்கும் கணவன் இறந்தபின் செய்வதை எல்லாம் செய்து அந்த மயானத்திலேயே விட்டுவிட்டு, வந்தவர்கள் எல்லாம் சென்று விடுகிறார்கள்; பிறகுதான் தெரிகிறது. அந்தப் பெண்ணுக்கும்.....! ...... 'ஓ' ...... என்று கதறி அழுகிறாள்! மழையும் பெய்கிறது.

ஆகாய மார்க்கமாய் சென்று கொண்டிருந்த பார்வதியும் பரமேஸ்வரனும், மயானத்தில் அழுது கொண்டிருந்த அந்த அபலைப் பெண்ணின் அழு குருலைக் கேட்டனர்.

பார்வதி, 'யாரோ ஒரு பெண்ணின் அழுகுரல் கேட்கிறது - போய் பார்க்கலாம்' என்று சொன்னார். அந்த மயானத்தில் அழுதுகொண்டிருந்த பெண்ணிடம் பார்வதி சென்று, என்னம்மா? ஏன் அழுகிறாய்? என்று கேட்டாள். நடந்த கதைகளையெல்லாம் சொல்லி அந்தப் பெண்ணும் ''நீங்களென்ன இதைக் கேட்டுத் தீர்க்கப்போகிறீர்களா, ஆற்றப் போகிறீர்களா?'' என்று அழுதபடியே கூறினாள். தேவியும், தீர்ப்பவர்களும் நாங்களே, ஆற்றுபவர்களும் நாங்களே. நீ போன ஜென்மத்தில் 'ஆடி அமாவாசை' நோன்பு குறையாக செய்திருக்கிறாய். அதனால் இந்த ஜென்மத்தில் உன் கணவனாக வாய்த்த அந்த பையனுக்கு ஆயுள் இல்லாமலும், உனக்கு 'ஐந்தாவது தனம்' ('ஐ' தோதனம்) இல்லாமலும் (சுமங்கலி ஸ்தானம்) எடுக்க வேண்டியதாயிற்று. அதனால் உனக்கு 'நோன்பு' சொல்லி வைக்கிறேன், அதை நீ செய்துகொள், எல்லாவற்றையும் பெறுவாய். பூலோகத்தில் இருப்பவர்களுக்கும் சொல்லி எல்லோருக்கும் நன்மை செய்வாய், என்று சொல்லி ஒரு நதியை உண்டுபண்ணி, அதில் 'ஸ்நானம்' செய்யச் சொல்லி பூ, பழம், மஞ்சள், விளக்கு, வெற்றிலைப் பாக்கு எல்லாம் சிருஷ்டி செய்து, மண்ணால் ஒன்பது கொழுக்கட்டைகள் செய்து பூஜைக்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செய்து வைத்தபின், ''பிணத்தின் காலை எடுத்துவா'' என்றுகூறினாள். பரிதாபத்திற்குரிய அந்தப் பெண் எல்லாம் எரிந்து சாம்பல் ஆகிவிட்டது; எப்படி எடுத்து வருவது? என்று பார்வதியைப் பார்த்துக் கேட்டாள்: எடுத்துப்பார் கிடைக்கும்! என்று பார்வதி தேவி சொல்ல, அந்தப் பெண்ணும் போய்ப் பார்த்தாள். அங்கு மழையினால் பிணத்தின் ஒரு கால் மட்டும் எரியாமல் இருந்தது. அதை மட்டும் எடுத்து வந்து, பார்வதியின் முன்னால் வைத்தாள். அதற்குச் சந்தனம், குங்குமம் எல்லாம் வைத்து அலங்காரம் செய்து அதற்கு பூஜை செய்யச்



சொல்லி, 'நோன்பு' செய்வித்து, கையில் கயிறு கட்டிவிட்டு அம்மன் தானே ஒரு பக்கம் இருந்து, ''தாம்பூலம்'' எடுத்துக் கொண்டு பூஜை செய்த பூ, அட்சதை ஆகியவற்றைக் கையில் எடுத்துக்கொள்ளு மாறு அவளிடம் சொல்லி, எரிந்து சாம்பலாகி விட்ட பிணத்தின்மேல் போடச் சொன்னாள். அந்தப் பெண் ணும் அவ்வாறே செய்தாள். உடனே தூங்கி எழுந்த தைப் போல் அந்தப் பெண்ணின் கணவன் எழுந்து நின்றான். எழுந்து, இந்தப் பக்கம், இந்தப் பக்கம் என்று ஒன்றும் புரியாமல் விழித்தான். தான் காண்பது கனவா அல்லது கற்பனையா என்று அந்தப் பெண் ஆச்சரியத்தால் திகைத்துப் போய் பூஜை செய்யத் தனக்கு உதவிய தேவியைத் திரும்பிப் பார்த்தாள். திரும்பிப் பார்த்தவள் யாரும் இல்லாமல் போகவே மெய்சிலிர்த்து, ஈஸ்வரியின் அனுக்கிரஹத்தை நினைத்து அளவிலா மகிழ்ச்சி அடைந்தாள். நடந்த விரதங்களையெல்லாம் நாகம் தீண்டி உயிர் இழந்த தன் கணவனிடம் கூறினாள். அவனுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு ஓர் எல்லையே இல்லை. உடனே தன் பெற்றோர்களைப் பார்க்கவேண்டும் என்று தன் மனைவியிடம் கூறினான். மை, பூ, அட்சதை - எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு, தாங்கள் வந்த வண்டியிலேயே, தானும், கணவனுமாக ஏறிக் கொண்டு தங்கள் அரண்மனைக்குச் சென்றார்கள்.

இதையறிந்த ஊர் ஜனங்கள் எல்லோரும் நோய் வாய்ப்பட்டிருந்த அரசனிடம் இந்த அதிசயத் தைச் சொன்னார்கள். அவர் இதை நம்பவில்லை, பார்வதிதேவி அருளால் இறந்த கணவனை எழுப் பிக்கொண்டு வந்த அந்தப் பெண், தான் கொண்டுவந்த 'மை' புஷ்பம்' 'அட்சதை' இவற்றை அரசனுக்கும் அரசிக்கும் கொடுத்தாள். உடனே அந்தப் பெண்ணின் மாமியாருக்குக் கண் பார்வை பளிச்சென்று தெரிந்தது. நோய் வாய்ப்பட்டிருந்த அரசன் மிகவும் உற்சாகத் துடன் எழுந்தான். அரண்மனை முழுவதும் அட்சதை தூவி மாமியார், மாமனார் இருவருக்கும் இவர்கள் நமஸ்காரம் செய்தார்கள். இறந்த மகன் உயிர்பெற்றதை அறிந்து தன் மருமகளிடம் அரசனும், அரசியும் விவரம் கேட்டனர். அந்தப் பெண்ணும் நடந்த விருத்தாந்தங் களை விவரமாகச் சொன்னாள். பெற்றவர்களும் ''அப்படியா, என் புத்திர சோகத்தைப் போக்கிய நீ என்றும் பதினாறு பெற்று, பெரு வாழ்வு வாழ வேண்டும்'' என்று வாழ்த்தினர். மகனைக் கட்டி அணைத்து உச்சிமுகர்ந்து பெற்றோர் ஆனந்தப் பர வசத்தில் ஆழ்ந்தனர். இந்தச் செய்திகளை எல்லாம் அறிந்த அவளது மாற்றாந்தாய், 'இப்படியும் ஆகுமா' என்று வயிற்றெரிச்சல் கொண்டாள். கொடுமையே உருவமாகக் கொண்ட ஓர் தீயவளின் வயிறெரிச்சல் ஓர் உத்தமியை என்ன செய்துவிடும்? இறந்து போய் எரிந்து சாம்பலானவன் மீண்டும் உயிர் பெற்ற இந்த அதிசயம் ஊர் உலகம் எல்லாம் பரவியது. பொது மக்கள் மதுராபுரி அரண்மனைக்கு முன்னால் கூடினர். 'ஆடி அமாவாசை' நோன்பின் பெருமையை இளவரசி வாயிலாக உணர்ந்தனர்.

அரசனின் குமாரி போன ஜென்மத்தில் ஆடி அமாவாசை நோன்பைக் கடைபிடிக்காமல் விட்ட தால் வந்த வினை; அந்தக் குறையைப் போக்க; பார்வதி பரமேஸ்வரன், நோன்பு சொல்லி வைத்தது; அதன்மூலம் வினை தீர்ந்து நன்மை அடைந்தது ஆகிய செய்திகளை அந்த ஊர் நன்மக்கள் கேட்டனர். அவர்களும் 'ஆடி அமாவாசை' நோன்பைத் தெய்வ சிரத்தையுடன் பூலோகத்தில் உள்ளவர்கள் அனை வருக்கும் ஒருவர் வாயிலாக மற்றொருவருக்கு இந்தச் செய்தி பரவியது. ''அவர்கள் நோன்பு இருந்ததைப் பெரியவர்களுக்குச் சொல்லி வந்த பலன், கேட்ட பலன், அவர்களுக்குக் கொடுத்த பலனை நமக்குக் கொடுத்து ரட்சிக்க வேண்டும்! ஆயுள்பலம், சுமங் கலித்தனம், அஷ்ட ஐஸ்வரியங்களுடன் புத்திர, பௌத்திராஷ்டத்தையும் கொடுத்துக் காப்பாற்றி, ரட்சிக்க வேண்டும் என்று நாம் எல்லாம் வல்ல இறை வனை மனமாற பிரார்த்தனை செய்து கொள் வோம்.....''

## ஆடி அமாவாசை நோன்புக்குத் தேவையானவை

ஒன்பது தாம்பூலங்கள் கொடுக்க வேண்டும். வெற்றிலை 9, மஞ்சள் 9, பாக்கு 9, தட்சணையுடன் தர வேண்டும். புஷ்பம், பழம், கரதகுடுமு தர வேண்டும். கரதகுடுமு என்பது மைதாமாவில் தேங்காய் பூரணம் வைத்து எண்ணெயில் பொரித்து எடுக்கும் பலகார மாகும் கட்டையால் செய்த குத்துவிளக்கு அல்லது விளக்கு ஏற்றாமல் ஒரு குத்து விளக்கை அலங்காரம் செய்து கொள்ளவேண்டும். இந்தக் கதை சொல்லும் போது 'மை' விளக்கில் (கத்தியில் சந்தனம் பூசி) இட வேண்டும். ஒன்பது (கரதகுடுமு) செய்து நெய்வேத் தியம் செய்யவேண்டும். (தேங்காய் பூரணத்தை கோதுமை அல்லது மைதாமாவில் அப்பளம் வைத்து, எண் ணையில் பொரித்து எடுக்கவேண்டும். நோன்பு பூர்த்தி செய்யும்போது, குத்து விளக்கு ஒன்றை, கூடப்பிறந்த வனுக்கோ அல்லது ஒரு பிராமணருக்கோ தானம் செய்ய வேண்டும்.

# ஸ்ரீ அழகிய மணவாள மாமுனிகள்

- திருமதி கோமதி ராகவன், எம்.ஏ.,



வைணவ குரு பரம்பரையில் கடைசியாக ஆசார்ய பதம் வகிப்பவர் ஸ்ரீமணவாளமாமுனிகள். இவர் கி.பி. 1370 ஸாதாரண வருட ஐப்பசி மாதத்தில் திருமூல நட்சத்திரத்தில் திருநாவீறுடைய பிரான் தாஸரண்ணர் என்பவரின் திருக்குமாரராய் ஆழ்வார் திருநகரி என்கின்ற திருக்குருகூரில் அவதரித்தார். இவரது தந்தையார் இவருக்கு அழகிய மணவாளன் என்று பெயரிட்டார். இவர் தனது சிறு வயதிலேயே வேதங்களையும் வேதாந்தங்களையும் மற்றுமுள்ள சகல சாஸ்திரங்களையும் தமது தந்தையார் மூலமும் பிற ஆசார்யர்கள் மூலமாகவும் ''சொல்லார் தமிழொரு மூன்றும் சுருதிகள் நான்கும் எல்லையில்லா அறநெறியாவும் தெரிந்தவன்'' என்றபடி கற்றுணர்ந்தார்.

ஸ்ரீ அழகிய மணவாளர் இவ்வாறாக ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் திருக்குருகூரில் திருவாய்மொழிப் பிள்ளை என்ற திருநாமத்தையுடைய ஆசார்யர் வாழ்ந்து வந்தார். இவர் பிள்ளை லோகாசார்யர் திருவடிகளிலே நெடுநாள் பணிந்திருந்து சகல சாஸ்திரங்களையும் ரஹஸ்ய ஸாரார்த்தங்களையும் கற்றவர். திருமலையாழ்வார் என்கின்ற இயற்பெயர் கொண்ட இவர் ஸ்ரீமந்நாதமுனிகளால் ''நமாம்யகம் திராவிட வேத சாகரம்'' அதாவது ''உபநிஷத்திற்கு திருவாய்மொழி சமமாக உள்ளது. அப்படிப்பட்ட திராவிட வேத சமுத்திரத்தை வணங்குகிறேன்'' என்று பெருமைபடுத்தப்பட்ட நம்மாழ்வார் இயற்றிய திருவாய்மொழிபால் பெரும் அபிமானம் வைத்தமையால் திருவாய்மொழிப்பிள்ளை என்று அழைக்கப்பட்டார். ஸ்ரீஅழகிய மணவாளர் இவ்வாசார்யரின் அடிபணிந்து தம்மை சிஷ்யராக ஏற்றுக்கொள்ள வேண்டினார். திருவாய்மொழிப்பிள்ளையோ ''எம்பெருமானார் அவதார புருஷர் என்று அறிந்திருந்தும் பெரியநம்பி முதலானோர் அவருக்கு ஆசார்யராக அமைய நேர்ந்தாற் போல ஏதோ விதிவசமாக நானும் உமக்கு ஆசார்யனாக நின்றேன்'' என்றார். அவர் ஸ்ரீஅழகிய மணவாளரிடம் ''நம் பூர்வாசார்யர்கள் சகல சாஸ்திரமும் கற்றும் ஆழ்வார்களின் ஈரச் சொற்களின் அனுபவத்திலேயே பெரும்பாலும் ஊன்றி அவற்றைப் பிரவசனம் செய்வதையே முக்கிய கைங்கர்யமாகக் கொண்டு வாழ்ந்தனர். அவ்வாறே நீரும் செய்ய வேண்டும்'' என்று பணித்தருளினார். ஸ்ரீஅழகிய மணவாளரும் இதனையே பெரும்பேறாகக் கருதி மிகுந்த ஸாத்வீகத்துடன் ஆழ்வார்களின் தத்துவங்களை பிரவசனம் செய்துவந்தார். ஆனால் இதர ஸம்பிரதாயங்களைப் பற்றி அணுவளவும் இகழ்ச்சி செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு ஸ்ரீமணவாளர் பிரவசனக் கைங்கர்யத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் திருவாய்மொழிப்பிள்ளை, ஆழ்வார் திருநகரியில் உடையவருக்கு ஸந்நிதி பிரதிஷ்டை செய்ய வேண்டும் என்று நியமித்தார். ஸ்ரீமணவாளரும் அவ்வாறே செய்து ஸந்நிதியைச் சுற்றி இராமானுச தாஸர்கள் தங்குவதற்கேற்ப ஸ்ரீராமானுஜ சதுர்வேதி மங்கலம் என்கின்ற இடத்தையும் ஏற்படுத்திக் கொடுத்தார். உடையவர் திருவடியில் யதிராஜவிம்சதி என்ற நூலையும் அருளிச் செய்தார். உடையவர்பால் அழகிய மணவாளர் கொண்ட பக்தியைப் போற்றி ஆசார்யர் இவர்க்கு ''யதீந்த்ரப் பரவணர்'' என்ற திருநாமத்தைச் சூட்டினார்.

இந்நிலையில் திருவாய்மொழிப்பிள்ளை தமக்குப் பிறகு தம் சிஷ்யர்களுக்கு ஸ்ரீஅழகிய மணவாளர் ஆசார்யராக இருப்பார் என்று நியமித்தார். அழகிய மணவாளரிடம் ''தென்னரங்கர் செல்வ முற்றுந் திருத்தி வைத்தான் வாழியே'' என்று ஸ்ரீராமானுசர் திருவரங்கம் பெரிய கோயிலில் கைங்கர்யம் செய்தாற்போல் மணவாளரும் செய்ய வேண

டும் என மொழிந்து திருநாடலங்கரித்தார். அதன்படி ஒரு திருவாதிரைத் திருநாளில் அழகிய மணவாள ரும் நம்மாழ்வாரைத் தொழுதுவிட்டு திருவரங்கம் நோக்கிப் புறப்பட்டார்.

ஸ்ரீவில்லிபுத்தூர் வடபெருங்கோயிலில் பள்ளிகொண்ட பிரானையும்

''திரு மாலிருஞ்சோலை மலையென்றே னென்ன
திருமால் வந்தென் னெஞ்சுநிறையப் புகுந்தான்''

என்று நம்மாழ்வாரால் பாடப்பெற்ற கள்ளழகரையும் மங்களாசாஸனம் செய்தார். பின் திருவரங்கத்தில் எழுந்தருளி பெரிய பெருமாளையும் உடையவரை யும் ''படியாய் கிடந்து உன் பவளவாய் காண்பேனே'' என்றபடி கண்குளிரக் கண்டார். அவரது ஆசார்யரின் ஆசார்யரான பிள்ளை லோகாசார்யர் தம் திருமாளிகை சென்று சேவித்தார். சிலநாள் சென்றதும் திருவேங்கட முடையானையும் பெருமாள் கோயில் தேவராஜனை யும் துதித்தார். ஸ்ரீதேவராஜ மங்களம் என்கின்ற நூலினை இயற்றினார். ஸ்ரீபெரும்புதூர் சென்று ஸ்ரீஉடையவர் திருவடி தொழுது பின் ஸ்ரீயதோக்தகாரி (சொன்னவண்ணம் செய்த பெருமாள்) ஸன்னதி யில் ஸ்ரீபாஷ்யம் காலக்ஷேபம் சேவித்தார். இங்ஙனம் பல கோயில்கள் சென்று மங்களாசாசனம் செய்து திருவரங்கம் எழுந்தருளினார். நாலாயிரத் திவ்வியப் பிரபந்தப் பாசுரங்களுக்கு மிகச் சிறந்த வியாக்யானப் பிரவசனம் செய்து வரலானார். அவரது திருக்குமாரர் இராமானுசப்பிள்ளை அவர்களையும் வைணவ சம்பிர தாயத்தில் ஈடுபடச் செய்தார். அதன்பிறகு மஹநீயர் என்கின்ற ஜீயரிடம் தண்டம் சமர்ப்பித்து க்ருஹஸ்தாச் ரமம் நீக்கி சன்யாசம் பூண்டு அழகிய மணவாள மாமுனிகள் என்கின்ற திருநாமத்தையும் ஏற்று இந்த கடல் சூழ்ந்த மண் உலகம் வாழ, அரங்கன் தொண்டே சிறந்ததென்று எண்டிசையும் புகழோங்க வாழ்ந்து வரலானார். மணவாள மாமுனிகளை பெரிய ஜீயர் என்றும் வரவரமுனிகள் என்றும் அழைப்பர்.

பிள்ளை லோகாசார்யர் அருளிச்செய்த ஸ்ரீவசந பூஷணம், தத்வத்ரயம், முமுக்ஷுப்படி என்கின்ற மூன்று நூல்களுக்கும் வியாக்கியானம் எழுதியருளி னார். இராமானுச நூற்றந்தாதி என்ற சிறந்த படைப் புக்கும் ஆசார்ய ஹ்ருதயம் என்ற நூலுக்கும் வியாக்கி யானம் எழுதினார். நம்மாழ்வாருடைய திருவாய் மொழி ஈடு வியாக்கியானங்களுக்கு மிகச் சிறந்த பிரமாணத் திரட்டுகள் அருளினார். உபதேச ரத்தின மாலை, திருவாய்மொழி நூற்றந்தாதி போன்ற நூல் களை அவருக்கு மிக உவந்ததான தமிழ் மொழியில் அருளிச் செய்தார். மாமுனிகள் இயற்றிய கீதா தாத்பர்ய தீபம் என்னும் நூல் இப்போது கிடைக்க வில்லை என்பது மஹாவித்வான் காஞ்சி அண்ணங் கராசாரியார் கருத்து.

வான் திகழும் சோலை மதிளரங்கர் வண்புகழ்
ஆன்ற தமிழ்மறைகள் ஆயிரமும் மேல் ஈன்ற
முதல் தாய் சடகோபன் மொய்ம்பால் வளர்த்த
இதத் தாய் இராமானுசன்

என்று கூறுவர் திறவோர். அவ்வாறாக உடையவரே மணவாள மாமுனிகளாக அவதரித்து தமிழ் நூல் களான திவ்வியப் பிரபந்தங்களுக்கு ப்ரவசனம் செய் தருளினார் என்று கூறுவர். உடையவர் வைணவத் திருத்தலங்களில் வடமொழியையும் தெள்ளறு தமிழ் மொழியையும் பவளமும் முத்தும் போல அலங் கரிக்கச் செய்தார். இவருடைய திருவவதாரமாகக் கொள்ளப்படும் ஸ்ரீமணவாள மாமுனிகளோ திராவிட வேதமாகிய திருவாய்மொழிக்கும் பிரபந்தங்களுக் கும் வியாக்யானம் செய்வதையே பெரும்பேறாக எண்ணினார். தமிழ் வேதத்திற்கு மாமுனிகள் மொழிந்த வியாக்கியானம் கேட்டு அரங்கனே இவரை தம் ஆசார்யராக ஏற்றார் என்று தெளிந்தோர் கூறுவர்.

இவரது வைணவ தத்துவங்களையும் இரு மொழி ரஹஸ்ய வியாக்கியானங்களையும் சிறந்த ஸாத்வீக பண்பினையும் போற்றி திருநாராயணபுரம் ஜகந்யாசாரியார் என்ற ஸ்வாமி ஓர் வெண்பாவினை அருளினார்:

பூதூரில் வந்துதித்த புண்ணியனோ? பூங்கமழும்
தாதார் மகிழ்மார்பன் தானிவனோ? - தூதுற
வந்த நெடுமாலோ மணவாள மாமுனிவன்
எந்தையிவர் மூவரிலும் யார்?

ஸ்ரீவானமாமலை ஜீயர், கோயில் அண்ணன் போன்ற மடத்துப் பெரியோரையும் திருமாளிகை ஆசார்யர்களையும் மாமுனிகள் ஆழ்வார்களின் திருப்பாசுரங்களைப் பிரவசனம் செய்ய நியமித்தார்.

இவ்வாறாக வைணவத்திற்கும் தமிழ் மொழிக்கும் பெருந்தொண்டாற்றிய ஸ்ரீ அழகிய மணவாள மாமுனிகள் அடிபணிந்து நாமும் அவர்கள் பணியில் ஈடுபடுவோமாக.

அடியார்கள் வாழ அரங்கநகர் வாழ
சடகோபன் தண்தமிழ் நூல்வாழ - கடல் சூழ்ந்த
மண்ணுலகம் வாழ மணவாளமாமுனியே
இன்னுமொரு நூற்றாண்டிரும்.

★★★

# காலணிகளைச் சுமந்த கண்ணபிரான்

- விட்டுணுதாசன் சுந்தரம், திருமங்கலம்

பாரதப் போர் மிகக் கடுமையாக நடந்து கொண்டிருக்கிறது. துரியோதனனுக்குப் படைத் தள பதி பீஷ்மர். பீஷ்மர் போர் செய்வதில் பெரும் வல்லவர். இருப்பினும் பாண்டவர்களை அடக்க இயலவில்லை. இதனால் துரியோதனனுக்கு பீஷ்மர் மேல் அளவு கடந்த கோபம். பாண்டவ சேனைகளின் மிக முக்கிய வில்லாளி விஜயனை அழித்தால் தான் போரில் வெற்றி பெற முடியும் என அறிந்தவன் துரியோதனன். இந்தக் கோபத்தை பிதாமகர் பீஷ்ம ரிடம் காண்பித்தான்.

''பீஷ்மரே! நீர்போரில் வல்லவர் என்பதற்காக உன்னைப் படைத்தளபதியாக நியமித்தேன். நமது எதிரிகள் பஞ்ச பாண்டவர்களை அடக்க உங்க ளால் முடியவில்லை. காரணம் எனக்குத் தெரியும். அருச்சுனன் உங்களது அருமைப் பேரனல்லவா? அவனைக் கொல்ல மனம் வருமா? ஏதோ ஏனோ தானாவென்று ஒப்புக்காகத்தான் போரிடுகிறீர்களே தவிர, ஒரு படைத்தளபதி என்ற முறையில் நீங்கள் போர் செய்யவில்லை'' என்று பீஷ்மரின் மன உறுதியைப்பற்றி முறைகேடாகப் பேசினான் துரியோதனன்.

பீஷ்மர் சொன்னார்: துரியோதனனே! இனி மேல் அப்படியெல்லாம் பேசாதே. நான் ஒரு படைத்தளபதி என்கிற முறையில் தான் இதுவரை என்னுடைய கடமைகளை செய்துவந்துள்ளேன். நீ என்னை தவறான கண்ணோட்டத்துடன் பார்க் கிறாய். சந்தேகப்படுகிறாய். சந்தேகம் ஒரு பெரிய தொத்து நோய். அதை முதலில் குணமாக்கு. ஆத் திரத்தில் அறிவிழந்து பேசாதே! நாளைய போரில் நிச்சயமாக அருச்சுனனை வெல்கிறேன். அருச்சுனனா? அல்லது நானா? என்று இரண்டில் ஒன்றைப் பார்த்துவிடுகிறேன் என்று சூளுரைத்தார்.

இந்த விஷயம் பாண்டவர்களுக்கு எட்டியது. திரௌபதி துக்கத்தில் மூழ்கினாள். உலக நாயகனான கண்ணனைச் சரணடைநதாள். கண்ணா! உலகைக் காக்கும் பரம்பொருளே! பீஷ்மர் துரியோதனனிடம் நாளைய போரில் விஜயனைக் கொன்று வெற்றி வாகை சூடப்போவதாக சூளுரைத்திருக்கிறாராம். நான் என்ன செய்வேன். பீஷ்மர் போர் செய்வதில் வல்லவரல்லவா? நீதான் என் கணவரை காத்தருள வேணும். என்னைக் கைவிட்டு விடாதே கண்ணா என்று கெஞ்சினாள்.

கண்ணன் திரௌபதியை சமாதானப்படுத்தி, ''கவலைப்படாதே. என்னிடம் சரணாகதி அடைந்த வர்களை ஒரு போதும் கைவிடமாட்டேன். இந்தப் போரை நடத்துவபவனும் நானே! முடிப்பவனும் நானே! அருச்சுனனுக்கு எந்தத் துன்பமும் வராது. இதற்கு ஒரு தந்திரம் செய்கிறேன். நீ என்னுடன் வா'' என்று அழைத்தார் கண்ணன்.

இரவு நேரம். எங்கும் இருள் சூழ்ந்துகொண் டிருந்தது. போரில் மாய்ந்தோர் இங்குமங்குமாகச் சிதறிக் கிடக்கிறார்கள். மயான அமைதி நிலவுகிறது. இவற்றைத் தாண்டி கண்ணனும் திரௌபதியும் சென்று கொண்டிருக்கிறார்கள். திரௌபதி காலில் சலங்கைக் கட்டிக்கொண்டிருந்தாள். அது நடந்து வரும்போது சல் சல் என ஒலித்தது.

''திரௌபதி! பெண்கள் யாரும் போர்களத்தில் வரக்கூடாது. உன் காலில் கட்டிய சலங்கை ஒலியே உன்னைக் காட்டிக் கொடுத்துவிடும். சலங்கையைக் கழற்றி என்னிடம் கொடு'' என்று கேட்க திரௌபதி யும் அப்படியே செய்தாள்.

பர்ணசாலை அருகே வந்தார்கள். பர்ண சாலைக்குள் ஒருவர் ஏதோ ஆலோசித்தபடி கம்பீரமாக குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தார். அவர் தான் பீஷ்மர். நாளை நடக்கும் போர் யுக்தி களைப்பற்றி ஆலோசித்துக்கொண்டிருக்கிறார்.

திரௌபதி கேட்கிறாள் ''நாம் ஏன் இங்கு வந்தோம். என்னை எங்கே அழைத்துக் கொண்டு போகிறாய். எல்லாமே புதிராக இருக்கிறதே! எனக்கு ஒன்றும் புரியவில்லையே'' என்றாள்.

கண்ணன் கூறுகிறார் : நாம் காரணமாகத்தான் இங்கு வந்திருக்கிறோம். இதோ இந்த பர்ணசாலை பீஷ்மருடையது. குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருப்பவர் பீஷ்மர் தான். நாளைய போரில் விஜயனைக் கொல்வதற்கு ஆலோசனை நடத்திக் கொண்டிருக்கிறார். அவர் எதிரில் செல்லும்போது உன்னை யார் என்று அறிவதற்குள் அவர் காலில் விழுந்து வணக்கம் செய். அவர் உன்னை ஆசிர் வதிப்பார். அது எனக்கு போதும் என்கிறார் மாயக்கண்ணன்.

அப்படியே செய்கிறேன் என்று திரௌபதி கிளம்ப ஆயத்தமானாள். ''காலணியுடன் சென்றால், நீ உள்ளே நுழைவதை அது காட்டிக் கொடுத்துவிடும். ஆதலால் காலணியை என்னிடம் கொடுத்துவிட்டுச் செல்வாயாக'' என்றார் கண்ணன்.

திரௌபதியும் கண்ணனிடம் காலணியைக் கொடுத்துவிட்டு ஓசைப்படாமல் உள்ளே நுழைந்து பீஷ்மருக்கு வணக்கம் செய்தாள்.



குனிந்தபடி திரௌபதி வணக்கம் செய்த தினால் வந்தது யார் என்று அறிவதற்கு முன்னரே ''தீர்க்க சுமங்கலி பவ'' என்று ஆசிர்வாதம் செய்து விட்டார் பீஷ்மர்.

''பெண்மணி நீயார்? எதற்காக இந்நேரம் இங்கு வந்தாய்'' என்று கேட்டார் பீஷ்மர். திரௌபதி தனது முகத்திரையை விலக்கியதும் அவர் திடுக் கிட்டுப் போனார். நீயா!

திரௌபதிக்கு அவர் தீர்க்கமான சுமங்கிலி என்ற வரத்தை அளித்து விட்டதால் இனிமேல் பாண்டவர்கள் யாரையும் அவரால் கொல்ல முடி யாதல்லவா?

தந்திரம் பீஷ்மருக்கு விளங்கிவிட்டது. திரௌ பதியால் இந்த தந்திரத்தை நிச்சயமாக செய்திருக்க முடியாது. பல மாயைகள் செய்யும் மாயக்கண் ணன் தான் இந்த ஜாலம் எல்லாம் செய்திருக்க வேண்டும் என்று புரிந்து கொண்டார்.

''திரௌபதி! யார் உன்னை அழைத்து வந்தது? உண்மையைச் சொல்'' என்று கேட்டார் பீஷ்மர்.

கிருஷ்ணர் தான் என்னை அழைத்து வந்தார் என்றாள் திரௌபதி. கிருஷ்ணர் எங்கே? பீஷ்மர் கேட்க, பர்ணசாலையின் வெளியே நின்றுகொண் டிருக்கிறார் என்றாள்.

இருவரும் பர்ணசாலையிலிருந்து வெளியேறி வந்தனர். அங்கே ஒரு கையில் திரௌபதியில் கால் சலங்கையையும், மறு கையில் காலணி களை ஏந்திய படியும் நின்று கொண்டிருந்தார் கிருஷ்ண பகவான்.

அண்ட சராசரமே பகவானின் பாதக் கமலங் களில் சரணாகதி அடைந்திருக்கும் போது ''சர்வ தர்மான பரித்யஜ்ய மாமேகம் சரணம் வஜா'' என்ற படி அடியார்கள் அனைவரும் கண்ணனின் கழ லடியே சரணம் என்று இருக்கும்போது, சொல்லினுள் வாய்மையாக, அறத்தினுள் அன்பாக; வேதத்தின் மறையாக; அனைத்திலும் உட்பொருளாக; இருக்கும் ஆண்டவன் தன்னிடம் அடைக்கலம் புகுந்த திரௌ பதியின் துன்பத்தைத் துடைக்க தானே அடியாரின் காலணியை ஏந்தி நிற்கிறார்.

பீஷ்மர் பதறிப் போய் சுவாமி! என்ன காரியம் இது? தாங்கள் காலணியை ஏந்தி நிற்கலாமா? எனக்கேட்டார்.

என் பாதத்தில் சரணடைந்த பக்தர்களைக் காப்பாற்ற எந்த வேலைகளையும் செய்யத் தயங்க மாட்டேன். காலணியை ஏந்தினால் என்ன? பாண்ட வர்களைக் காப்பாற்றிவிட்டேன் அல்லவா? என்று விரயமாகக் கேட்டார் பகவான்.

பீஷ்மர் கை கூப்பி வணங்கியபடி ''கருணைக் கடலே! உலக நாயகனே! கண்ணனே! பகவானே! உனது லீலைகளை நான் நன்றாக புரிந்து கொண் டேன். அருச்சுனனைக் காக்க நினைத்துடன், எனக்கு மோட்சம் அளிக்கவும் திருவுள்ளம் கொண்டாய்'' என்று கண்ணனின் திருவடிகளில் விழுந்து வணங் கினார்.

நாமும் தூய பக்தியுடன் கண்ணனின் நாமங் களை உச்சரித்து கூடாரை வெல்லும் சீர் கோவிந்த னைத் தொழுது, ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடி இம்மையிலும், மறுமையிலும் எவ்வித இன்னல் களும் அடையாமல் கண்ணனின் கருணையால் வாழ்ந்திடுவோமாக! ★★

# வினாவும் விடையும்

- திருப்புகழ்மாமணி மு. அருணகிரி

***வினா :*** திருப்புகழ் பாடல் : - ''இருப்பவல் திருப்புகழ் விருப்பொடு படிப்பவர்

இடுக்கினையறுத்திடும் - என வோதும்
இசைத்தமிழ் நடத்தமிழெனத் துறைவிருப்புட
னிலக்கண இலக்கிய - கவிநாலும்''

இப்பாடலில் முதலடியில் வரும் சீரில் ''இருப்பவல் திருப்புகழ்'' எனத்துவங்கும் பதத்திற்கு சரியான கருத்து விளங்கவில்லை. விளக்கிட வேண்டுகிறேன்.

***விடை :*** ''இருப்பவல் திருப்புகழ்'' - இரும்பு அவல் திருப்புகழ் எனக் கொண்டால் - அது திருப்புகழின் உரத்தை காட்டுவதாகும். இவ்வன்மையை ''சினத்தவர் முடிக்கும்'' எனும் பாடலில் விரிவாக கூறியுள்ளதை கவனிக்கலாம். அவல் போல் உண்ணலாம். உண்டபின் இரும்பு போல மனோதிடம் பெறலாம். மேலும் யமனையும் அறை கூவியழைக்கும் திடம் பெறலாம் - இவ்விதத்தில் பொருள் அமைந்துள்ளதாக பொதுவாக யாவரும் கருதிய போதிலும்,

**சிறப்பான மற்றொரு பொருள் :** - ''இருப்பவல் திருப்புகழ்'' என்னும் பதத்தினை இருப்பு அவல் எனக் கொண்டு, கருத்தினை ஆராய்வதே பொருத்தமாகும்.

''திருப்புகழ்'' கையிருப்பிலே உள்ள அவலைப் போன்றது. காலன் ஊர்க்குச் செல்லும் நெடுவழிப்பயணத்தில் உபயோகப்படும் அவல் என்பதாகும். அருணகிரிநாதர் முருகனுக்கு ஒரு வகை அவல் கொடுத்தார். குசேலர் கொடுத்தது நெல் அவல். ஆனால் அருணகிரியாரோ முருகனடியார்களுக்கு கொடுத்தது சொல் அவல். அதனால் நம் ஆவிபிரிந்து கடைசி பயணம் செல்லும் நேரத்தில் உதவுவது சொல் அவலாகிய திருப்புகழ் எனும் பாடல்களே கை இருப்பாகும்.

உயிர் போகும் கடை வழி - தனி வழி, தொலையா வழிக்கு அவலோ ''பொதிசோறோ'' இருப்பு அவசியம் எனும் கருத்தினை மனத்தில் கொண்டு தினமும் இப்பாடலை ஓதிவருவது சிறந்த பலனை அளிக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

***வினா :*** - அருணகிரிநாதர் அருளிச் செய்த கந்தரலங்காரப் பாடலின் ''படிக்கும் திருப்புகழ்'' எனத் துவங்கும் 50-வது பாடலில் இறுதியில் ''தனி மயிலேறும் இராவுத்தனே'' என்பதில் 'இராவுத்தனே' எனும் பதத்துக்கு பொருள் விளங்கவில்லை.

**விளக்கம்:-** பொதுவாக அருணகிரியார் தனது பாடல்களில் மயிலேறும் மாணிக்கமே, மயில் வாகனனே என்றெல்லாம் பலவாறு பாடியிருந்த போதிலும், இப்பாடலில் 'இராவுத்தனே' எனப் பாடியுள்ளது மிகவும் சிறப்புடையதாகும். இதுகாறும் எந்த அறிஞர்களோ, புலவர் பெருமக்களோ, ஞானிகளோ கூறாத விதத்தில், இவர் கூறியது விந்தைக்குரியது மட்டுமன்றி சிந்தனைக்கும் ஏற்றது.

பொதுவாக நம் நாட்டில், யானை நடத்திச் செல்லும் பாகனை, மாவுத்தன் எனவும், குதிரையை நடத்திச்செல்லும் பாகனை ராவுத்தன் எனவும் வழங்கி வந்துள்ளது யாவரும் அறிந்ததொன்றாகும்.

இப்பாடலில் 'மயிலேறும் இராவுத்தனே' என்று பாடியதில் ஒன்றுக்கொன்று பொருத்தமில்லை தான் எனத் தோன்றினாலும், கொஞ்சம் கருத்தை ஆழ்ந்து நோக்கின் உண்மை புலப்படும். சைவர்களுக்கே உரித்தான தில்லை நடராசப் பெருமான், ஒரு சமயம் நரியை குதிரையாக்கி, மாணிக்கவாசகர் பொருட்டு பாண்டியனிடம் ஓட்டிச் சென்ற வரலாறு திருவிளையாடல் புராணத்தில் கூறப்பட்டுள்ளதை யாவரும் அறிந்திருக்கலாம். அதனால், குதிரைகளை சிவபெருமான் ஓட்டிச் சென்றதால், இராவுத்தனாக அழைக்கப்பட்டார். தில்லைக்கூத்தனே இராவுத்தனாகும்போது, அன்னாரின் மகன் முருகப் பெருமானும் ராவுத்தன் வர்க்கத்தில் சேர்ந்தவனாகத் தானே கருத வாய்ப்புள்ளது. இதனை நினைவில் வைத்துக் கொண்டுதான் அருணகிரியார், தாம் பாடிய கந்தரலங்காரப் பாடலில், ''மயிலேறும் இராவுத்தன'' என அடைமொழி தந்து பாடியுள்ளதை அனுபவிக்குந்தோறும் உள்ளம் புல்லரிக்கும்.

இராவுத்தன் மகன், இராவுத்தன் எனக் கூறுவதில் என்ன பிழை இருக்கப்போகிறது?

***வினா :*** ''பஞ்சகௌயம்'' என்பதனை விளக்கிக் கூறிட வேண்டுகிறேன்.

கிரகப்பிரவேசம் போன்ற விழாக்களிலும், நீத்தார் கடன் நிகழ்ச்சிகளிலும், அமரரான பெற் றோர்கள்

நினைவு நாட்களிலும் (திவசம்), வீட்டில் ஏற்பட்ட தோஷங்களான தீட்டை விலக்குதல் எனும் புண்ணி யாவசனம் போன்ற நிகழ்ச்சிகளிலும் பஞ்ச கௌயம் புரோகிதர்களால் வழங்கி வருதல் இன்றைய நாள் வரை கடைப்பிடிக்கப்படும் மரபாகும். இதனை ஆங்கிலத்தில் (Convention) என கூறுவர். ஐந்து வஸ்துக் களின் கலப்பினைக் கொண்டதான பால், தயிர், நெய், பசுவின் யோனியில் இருந்து வெளி யாகும் கோமியம், சாணம் இவைகளையே பஞ்ச கௌயம் என்பதாக கொள்வதற்கு ஆதாரம் இல்லாத போன போதிலும் ஒரு மரபு வழியாக கருதப்பட்டு விட்டது. மேலும் இந்த ஐவகை வஸ்துக்களையே ஐந்து தெய்வங்கள் எனக் கூறியும் உள்ளனர்.

பாலுக்கு - சந்திரனும், தயிருக்கு - வாயுவும், நெய்க்கு - விஷ்ணுவும், சாணத்திற்கு - அக்னியும், கோசலத்திற்கு - வருணனும் உரிய தெய்வங்களாக கூறப்படுகின்றன. பாலை - பொன்நிறமான பசுவி னிடமும், தயிரை - நீலநிற பசுவினிடமும், நெய்யை - கருநிற பசுவினிடமும், சாணத்தை வெள்ளை நிற பசுவினிடமும், கோமியத்தை - செந்நிறப்பசுவி னிடமும் கொள்ள வேண்டும் எனவும், பஞ்ச கௌயத் தில், பாலும் நெய்யும் 3 பாகமும், தயிர் - பத்து பாகமும், சாணம் கோமியம் இரண்டும் 6 பாகமும் எடை இருக்கும் வகையில் கலக்க வேண் டுமாம். இன்றைய நாளில் புரோகிதம் செய்பவர்கள் அதைப் பின்பற்றுகின்றனரா என்பது சந்தேகத்திற் குரிய தொன்றாகும்.

''ஆவினுக்கழகு அரனைந்தாடுதல்'' எனச் சான்றோர்கள் கூறியுள்ளனரே என கருதுவோர்க்கு, பசுவினிடத்திலிருந்து தோன்றிய ஐந்து வஸ்துக்க ளாலும் அரனை நீராட்டப்பெறுவராயின், அதுவே பசுவிற்கு பெருமை என்பதல்லவா அப்பாடலின் பொருள். இறைவனை ஆவின் ஐந்தினால் நீராட்டும் போது மக்கள் அவற்றை பயன்படுத்துவதில் தவ றென்ன இருக்கப் போகிறது என கேள்வி எழலாம். இதனைப் பற்றி சிறிது சிந்தித்தால் அவசியம். நாம் வணங்கும் இறைவன் சிரசிலும், ஏனைய பாகத்திலும் ஒரு பசுவின் சிறுநீரையும் சாணத்தையும் திருமஞ்சனம் செய்விப்பது சிறப்பாகுமா? இதனை சிறந்த ஆன்மீக பெருமக்கள் ஏற்றுக் கொள்வரோ? ''ஆனைந்து'' என்பது மேற்கூறிய அந்த ஐந்து வஸ்துக்களை குறிக்க வில்லை. அவற்றில் குறிக்கப்படும் ஐந்து வஸ்துக் களும் வேறு. அதாவது பால், தயிர், மோர், வெண்ணை, நெய் எனும் ஐந்து வஸ்துக்களேயாகும். இதனை உறுதிப்படுத்தும் வகையில், திருநாவுக்கரச ரது பாடல் ஒன்று தெள்ளத் தெளிவாக கூறுகின்றது. பாடலைப் பார்ப்போம்:-

''மாதனத்தை மாதேவனை மாறிலாக்
கோதனத்தில் ஐந்தாடியை, வெண்குழைக்
காதனை கடுவாய்க்கரைத் தென்புத்தூர்
நாதனைக் கண்டு நானுய்யப் பெற்றேனே''

- அப்பர் - தேவாரம் (5-62-4)

இப்பாடலில் ''கோதனத்திலைந்து'' எனும் தொடர் சிந்திக்கப்பாலது. கோபசுவினையும், தனம் - முலைக் காம்பினையும், ஐந்து - அதனின்று தோன்றும் 5 வஸ்துக்களையும் குறிக்கும் என்பதும், பிற உறுப் புக்களில் இருந்து வெளிவருவதை, அதுவும் வெறுக் கத்தக்க பசுவின் யோனியிலிருந்து வெளி வரும் கழிவுப்பொருள்களை குறிக்காது. இதனை உறுதிச் செய்யவே அப்பரும் 1300 ஆண்டுகளுக்கு முன்னரே மாறிலா கோதனத்தில் ஐந்தினிலாடி என்றதில், கோதனத்தில் எனும் சொல்லுக்கு முன் மாறிலா எனும் பதத்தைச் சேர்த்து பாடியுள்ளது, புரோகிதர், வேத விற்பனர்கள் போன்றோர்களால், தயாரிக்கப்பட்ட பஞ்சகௌயத்திற்கு, ஓர் மறுப்பு மட்டுமல்லாது, இது காறும் செய்து வரும் முறை திருத்திக் கொள்வதாகவும் அமைந்துள்ளது. மேலும் இக்கருத்துக்கு மறுப்புக் கூறாது சைவப் பெருமக்கள் யாவரும், அப்பர் வாக்கையே உச்சநீதிமன்ற (Supreme Court) தீர்ப்பு எனக் கொள்வதே சிறந்த பண்பாகும்.

ஒன்றிலிருந்து ஐவராய் தோன்றி, ஐவகைப் பணிகளை ஆற்றும் இறைவனுக்கு, ஒன்றிலிருந்தே தோன்றிய ஐவகை வஸ்துக்களால் இறைவனுக்கு திருமஞ்சனம் செய்விப்பதே பொருத்தமாகும். பரம் பொருள் ஒன்றிலிருந்து தான், சதாசிவன், ஈசன், பரமீசன், ஈசுரன், ஈசானன் எனும் ஐவரும் தோன்றி, படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனும் ஐந்தொழிலை ஆற்றுகின்றனர். அதுபோன்றே ''ஆ'' எனும் ஒன்றிலிருந்து, பால், தயிர், மோர், வெண்ணை, நெய் எனும் ஐந்து பொருட்களும் தோன்றி, ஐவகை பலனைத் தருகின்றன. ஆவினிட மிருந்து பாலும், அதை காய்ச்சி உறையிட்ட பிறகு தயிரும், அதனை கடைந்த பிறகு தோன்றும் மோரை யும், மோரின் மூலம் வெண்ணையும், வெண்ணையி லிருந்து நெய்யும், உருவாதலை யாவரும் மறுக்கவோ இயலாது. ஆகவே இதை என் விளக்கத்தை, மறைக் கவோ, மறுப்பு தெரிவிக்காது ஏற்றுக் கொள் வர் என்பதில் ஐயப்பாடு சிறிதும் இருக்காது என நினைக் கிறேன். இதற்கு மாறான கருத்து விளக்கம் கூறிச் சான்றோர்கள் தெளிவுபடுத்துவர் ஆயின் அதனை ஏற்கவும் யான் சித்தமாக உள்ளேன்.

★★★

# வினாவும் விடையும் - சாக்தம்

(அம்பிகை தொடர்பானவை)

- டாக்டர் பருத்தியூர் K. சந்தானராமன்

1) அம்பிகை வழிபாட்டில் முன்னணியில் உள்ள இரு மாநிலங்கள் எவை?

2) அம்பிகையின் மந்திரத்தை என்ன பெயரிட்டு அழைக்கின்றனர்?

3) அம்பிகையின் 'யந்திரம்' எது?

4) அதில் எத்தனை முக்கோணங்கள் உள்ளன?

5) உடலுக்குள் உறங்கும் சக்திக்கு என்ன பெயர்?

6) அபிராமி பட்டரின் இயற்பெயர் என்ன?

7) தேவிபாகவதம் எவ்வகைப் புராணத்துள் அடங்கும்?

8) லலிதா சகஸ்ர நாமம் எந்தப் புராணத்துள் இடம் பெற்றுள்ளது?

9) அதற்கு உரை எழுதிப் புகழ் பெற்ற மகான் யார்?

10) அவ்வுரையின் பெயர் என்ன?

11) சக்தி பீடங்கள் எத்தனை?

12) பரசுராமர் எழுதிய அம்பிகை வழிபாட்டு நூல் எது?

13) அம்பிகை உறையும் மாளிகையின் பெயர் என்ன?

14) அம்மாளிகை இருக்கும் இடம் எது?

15) அபிராமி அந்தாதியில் இடம் பெறாத அசுர வரலாறு எது?

16) லலிதா சகஸ்ர நாமத்தில் குறிப்பிடப்படாத அசுர வரலாறு எது?

17) 'பிரத்யங்கிரா' என்பவள் யார்?

18) நுண்கலைகளுக்கு அதிதேவதை யார்?

19) அம்பிகை வழிபாட்டில் எத்தனை உபசாரங்கள் செய்வர்?

20) யோகி - யோகேச்வரி இவர்களுக்கு இடையிலான இணைப்புச் சக்திகள் யாவர்?

21) காஞ்சிபுரத்தில் எத்தனை சக்தி ஆலயங்கள் உள்ளன?

22) எந்த நூலை இயற்றி, குமரகுருபரர் ஹிந்துஸ்தானி மொழியில் புலமை பெற்றார்?

23) லலிதா சகஸ்ர நாமம் எந்த முனிவருக்கு உபதேசிக்கப்பட்டது?

24) குண்டலினி - கோணங்கள் முதலியன குறித்துப் பேசும் சைவத் திருமுறை எது?

25) அம்பிகை எங்குத் தவமியற்றி, ஈசன் உடலில் பாதியானாள்?

26) இராமகிருஷ்ணர் அருள் பெற்ற காளி கோயில் எங்குள்ளது?

27) உஜ்ஜயினி காளி யாருக்கு அருட் செய்தாள்?

28) கலைமகளை 'ஆற்றங்கரைச் சொற்கிழத்தி' என்று போற்றிய புலவர் யார்?

29) புலவர்கள் வறுமையுடையோர் என்பது பொதுவான கருத்து. அம்பிகை அருள் பெற்று, செல்வச் செழிப்பில் வாழ்ந்த புலவர் இருவர் யாவர்?

30) மன்மதன் எரிந்த சாம்பலில் தோன்றிய அசுரன் யார்?

31) அவனது இருதம்பியர் யாவர்?

32) அறம் வளர்த்த நாயகி (தர்மசம்வர்த்தனி) எந்தத் தலத்தில் உறைகிறாள்?

33) சென்னைக்கு வந்த மன்னன் சிவாஜி எந்த அம்பிகையை வழிபட்டாள்?

34) அம்பிகை அடியார்களின் தீட்சா நாமத்தின் கடைப்பகுதி எப்படி அமையும்?

35) வனதுர்க்கா மந்திரத்தால் ஆதிசங்கரர் எந்தத் தேவதையை வசப்படுத்தினார்?

36) அவள் இப்போது எப்பெயருடன் உறைகிறாள்?

37) பசுமைக்கும் வளமைக்கும் அதிதேவதை யார்?

38) ஸ்ரீசக்ரம் வரைந்த ஆங்கிலேயர் யார்?

39) குண்டலினி சக்தி குறித்து அவர் எழுதிய நூலின் பெயர் என்ன?

40) ஸ்ரீசக்கரத்தின் பிம்ப வடிவம் என்ன பெயர் பெறுகிறது?

41) அதனை ஆதிசங்கரர் பிரதிஷ்டை செய்த தலம் எது?

42) 'கடம்பவனம்' எனப் புகழப்படும் தமிழகத் தலம் எது?

43) புகழ் பெற்ற மதுரகாளியம்மன் எங்குக் கோயில் கொண்டுள்ளாள்?

44) புன்னை நல்லூர் எப்பெயரால் இப்போது அழைக்கப்படுகிறது?

45) சியாமளா தண்டகத்தை இயற்றியவர் யார்?

46) நந்த கோபரின் பெண்ணாகத் தோன்றிய தேவி யார்?

47) மயிலைக் கற்பகாம்பாள் பதிகம் இயற்றியவர் யார்?


48) உலகம்மை கலித்துறை அந்தாதியை இயற்றியவர் யார்?

49) வீரை கவிராஜ பண்டிதர் தமிழாக்கம் செய்த நூல் எது?


50) ஏழை விவசாயிக்காக ஆங்கிலேய நீதிபதி முன்பு சாட்சியுரைத்துச் சரித்திரம் படைத்த பருத்தியூர் மாரியம்மனின் பெயர் என்ன?

## விடைகள்

1) மேற்கு வங்கம், கேரளம்
2) ஸ்ரீவித்தை
3) ஸ்ரீ சக்கரம்
4) நாற்பத்து மூன்று
5) குண்டலினி
6) சுப்பிரமணியம்
7) உபபுராணம்
8) பிரும்மாண்ட புராணம்
9) பாஸ்கர ராயர்
10) சௌபாக்ய பாஸ்கரம்
11) ஐம்பத்தொன்று
12) பரசுராம கல்ப சூத்ரம்
13) சிந்தாமணி வீடு
14) மணித்திவு
15) பண்டாசுர வதம்
16) மகிடன் வதம்
17) சரப மூர்த்தியின் சக்தி
18) சியாமளா தேவி
19) அறுபத்து நான்கு
20) யோகினிகள்
21) காமாட்சி திருக்கோயில் மட்டும்
22) சகல கலா வல்லிமாலை
23) அகத்தியர்
24) திருமந்திரம்
25) திருக்கேதாரம்
26) தட்சிணேஸ்வரம்
27) காளிதாசன்
28) ஒட்டக்கூத்தர்
29) காளிதாசன், ஒட்டக்கூத்தர்
30) பண்டாசுரன்
31) விசுக்கிரன், விஷங்கன்
32) திருவையாறு
33) காளிகாம்பாள்
34) ஆனந்தநாதர்
35) கலைமகள்
36) சிருங்கேரி சாரதா தேவி
37) சாகம்பரி
38) சர் ஜான் உட்ராஃப்
39) சர்பெண்டைன் பவர்
40) மேரு
41) மாங்காடு
42) மதுரை
43) சிறுவாச்சூர்
44) மாரியம்மன் கோயில்
45) காளிதாசன்
46) மகாமாயா
47) தாச்சி அருணாச்சல முதலியார்
48) சிங்கை நமச்சிவாயர்
49) சௌந்தரிய லகரி
50) விஜய வாடா (ஆந்திரம்)
51) சந்தனமாரியம்மன்







அட்டைப்படம் 2, 3 & 4 விளக்கங்கள் :

திருவேற்காடு அருள்மிகு வேதபுரீசுவரர் மற்றும் தேவி கருமாரியம்மன் ஆலயத் திருக்குட நீராட்டு விழாக்கள் 23.6.99 மற்றும் 24.6.99 நாட்களில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ் வளர்ச்சி மற்றும் இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் இத்திருக்குட நீராட்டு விழாக்களில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். காஞ்சி தவத்திரு ஜெயேந்திர சரசுவதி சுவாமிகள், தவத்திரு சுவாமி இராமதாசர் அருளாசியுடன் நடைபெற்ற இவ்விழாக்களில் இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர் திருமிகு சுகவனேஸ்வர் இ.ஆ.ப. அவர்களும், அறநிலையத்துறையின் கூடுதல் ஆணையாளர் திருமிகு எஸ். கனகய்யா, பி.எஸ்.சி., பி.எல்., ஆகியோரும் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். திருக்கோயில் நிர்வாக அதிகாரியும் இணைஆணையாளருமான திருமிகு இரா. சுப்பிரமணியன், பி.ஏ.பி.எல்., மற்றும் திருக்கோயில் அறங்காவலர் குழுவின் தலைவர் திருமிகு டெக்கான் மூர்த்தி மற்றும் அறங்காவலர்கள், திருப்பணிக் குழுவின் உறுப்பினர்கள் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்திருந்தார்கள்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,
அச்சிட்டோர் : பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்., 142, ஜானி ஜான் கான் தெரு, சென்னை - 600 014.